மக்கள்தான் ஒரு நாட்டின் பெரும் அங்கமெனத் திகழுகிறார்கள். மக்கள் மாண்புடையவராயிருத்தல் வேண்டும் எனத் திருவள்ளுவர் செப்புகின்றார். மக்கள் உடல் வன்மை பெற்றவராயிருக்க லாம். அதனுலும் மாட்சிமைப் படலாம். **உள்ள உறுதி, அறிவில் திண்மை இவை பெற்றிருக்கலாம்.** ஆனல் அவர் கள் மக்கட் பண்பு உடையவராக இல்லை யாயின் 'மரம் போன்றவர் என்பது வள் ளுவர் கருத்து. இதைத்தான் வள்ளுவர்

அரம்போலும் கூர்மையுடையரேனும்
மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர் என்றார்.

இனி மக்கட் பண்பு என்றால்என்ன என்று அறிய சிலர் விழைதல் கூடும். உலகிலே மக்களை நாம் ஆறறிவு படைத்தவர்கள் என்கிறோம்' பகுத்தறிவு உண்டென்று கூறுகிறோம். விலங்கினம் ஐயறிவு உடை யது என்று சொல்லுகிறோம். அவ்விலங் கினத்தை மாக்கள் என்றும் குறிக்கிறோம் மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றார். தொல்காப்பியனரும். இவ்வாறு ஆறறிவு படைத்த மக்கள் - பகுத்துணரும் பண்பு படைத்த மக்கள் மக்கட் பண்பு பெறவேண்டும் என உரைத்தது சால வும் சிறந்ததன்றோ?

மக்கட் பண்பு உடையவராய்த் திகழ வேண்டுமாயின் பகுத்துணரும் பண்பின் படி தீயன விலக்கி நல்லன கொள்ளுதல் வேண்டும் தீயன என்றால் சொல்லிலும் செயலிலுமே என்பது உணரத்தக்கது சொல்லிலும் செயலிலும் பட்டுக்காண் பார் பலரும் உளர். ஆனல் நாம் சொல்லை மட்டிலும் எடுத்துக்கொண்டால் நல்ல சொற்களையே சொலல் என்று கூறிச் சென்றார் வள்ளுவர். அதற்கு

"இனிய உளவாக இன்னத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்தற்று"

என்ற குறள் குன்றின் மீதிட்ட குளிர் விளக்கென விளங்குகிறது. இனி தீய செயலும் செய்தல் கூடாது என்றும் கூறிப்போந்தர். இவை தவிர ஒழுக்கம் உடையவராகத் திகழுதல் வேண்டும் என் றார். ஒழுக்கத்தைப்பற்றி பத்துப் பாட்டுப் பாடி நம்மை எல்லாம் ஆய்வுக் கடலில் ஆழ்த்துகிறார். உயிரைவிட மேலானது என்று ஒழுக்கத்தை பிறருணர உரைக் கிறார். ஒழுக்கத்தின் இலக்கணத்தையும் உலகியலுக்கு ஒப்ப ஒழுகவேண்டிய இன் றியமையாமையையும் கூறிப்போந்த, வள் ளுவர் வாய்மை தவறுதல் கூடாது என் றார். அதற்கென ஒரு அதிகாரமும் அமைத்தார். வாய்மை என்றால் பொய் பேசாமை என்றுதானே பொருள்படு கிறது. ஆனல் பொய் பேசாது எவ்வாறி ருக்க முடியும்? தவறியும் சொல்லிவிடல் இயற்கையே அல்லவா என்று இயம்பு தல் கூடும். பொய் **நல்ல நன்மை** பயக்கு மானல் கூறுதல் தவறில்லை என்ற கருத் துப்பட,

"பொய்மையும் வாய்மையிடத்த
புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்,"

என்றார். பொய்யைத் தீயொழுக்கமென உரைக்கின்ற வள்ளுவர் இதில் மட்டும் 'லைசென்ஸ்' வைத்திருக்கிறார் என்று பலரும் ஐயுறுதல் கூடும். நன்மை பயப்ப தாக இருந்தால்தானே வள்ளுவர் பொய் புனையச் சொல்லியிருக்கிறார். அதிலும்

'பொய் சொல்லுக என்று சொல்லவில்லையே. தவறில்லை என்றுதானே சொன்னார்.

இவ்வாறு தீயொழுக்கமின்றி நல்லொழுக்கமுடையவராய் இருத்தல் வேண்டும் என்று கூறிப்போந்த வள்ளுவர் வாழ்வின் முறை கற்பிக்கவில்லையே என்று பலரும் கவலையுறுவர். திருமணம் என்ற ஒன்று இருக்கிறதே அதைப்பற்றி என்ன கூறியிருக்கிறார் என்று பலர்கேட்பார்கள் அதையும் விட்டாரில்லை. மனைக்கு மாட்சிதருபவள் இல்லாள் என்று சொன்னார். மாட்சி தருபவள் எத்தகைய குணங்கள் உடையவளாக இருக்கவேண்டும்? பிசிராந்தையார் கவலையற்று இருந்த காரணத்தால் நரை தோன்றவில்லை என்றாராமே. அந்தக் கவலையற்ற நிலைக்குக்காரணம் என்ன கூறினார்? மனையாள் என் மனைக்கு ஏற்றவள்என்றுதானே சொன்னார்; வருவிருந்து ஓம்பிச் செல்விருந்து நனிபேருவகை கொள்ளுமாறு இல்லறத்தை நடத்துபவள் என்று தானே சொன்னார். மனைக்குத் தக்க மாண்புடையவளாக இருக்கவேண்டும். அதைத்தான் வள்ளுவர் "மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் பேணி வளத்தக்காள் வாழ்க்கைத்துணை என்று சொன்னார். இவ்வாறு வருவாய்க்குத்தக்க செலவு செய்பவள்தான் மனைக்கு ஏற்றவள் என்று கூறிப் போந்தார். நாங்கள் திருமணம் செய்துகொண்டோம், நாங்கள் இனிப்பெறும் பயன் தான் என்னே என்பர் பலர். திருமணத்திற்கு யாழையும் குழலையும் விஞ்சும் மொழி பேசும் பிள்ளை பெற்று மகிழுங்கள் என்று சொன்னார். "குழலினிது யாழினிது என்ப தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று சொல்லியதன் உட்கருத்து உணர்ந்து மகிழற்பாலது. உள்ளம் தெளிவு பெற்றோம் ஐயா, குழலையும் யாழையும் மிஞ்சும் மொழிபேசும் சிறார் பிறந்தால் போதுமா என்று கடாவுவர் பலர். நல்ல குழவியே பெற்றெடுத்தல் வேண்டும். அறிவு நிரம்பியதாய்ப் புகழ்பட வாழுவதாய் இருக்க வேண்டும் என்றார். இவ்வாறு வாழ்க்கை வகுத்துக் கொடுத்த வள்ளுவர் இவர்களுக்கு ஒரு தலைவனையும் ஏற்படுத்தினர்.

தலைவன்-வேந்தன் நல்ல குணம் உடையவனாக இருக்கவேண்டும், ஆட்சி ஏற்றால் பலரும் பலகுறை சொல்வர். இன்சொல்லால் திட்டுவோரும் உண்டு. தீயசொல் கூறுவோரும் உளர். தீயசொல் கூறினும் அதைப் பொறுக்கும் தன்மை வேண்டுமென்றார். அதுமட்டுமல்லாமல் ஆண்மை உடையவன் வேண்டும் என்றார். இன்றைய அரசியலார் இதைஉற்று நோக்கிக் குற்றம் களைதல் நலம். இனி அவர் அவனுக்கு அறங்கூறும் அமைச்சர் தேவை என்றார். "படைகுடிகூழ் அமைச்சு நட்பு அரண் இவை ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்றார் படை தடை பல கடக்கவல்லதாக அமைய வேண்டுமென்றார். "கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்க்கும் ஆற்றலதுவே படை என்றார். இவ்வாறு அரசியல் அங்கங்கூறிய வள்ளுவர் அவன் செங்கோலை நோக்கினார். அவன் நடுவு நிலைமை தவறுதல் கூடாதென்றார். அதுமட்டுமல்லாமல் வரி அதிகம் வாங்கக்கூடாது என்றார் இதற்கு ஒரு புறநானூற்றுப்பாடலும் துணை செய்கிறது. யானைக்குக் கவளங் கவளமாக உணவிட்டால் எத்தனையோ நாட்களுக்கு வரும். அந்த யானையை வயலில் விட்டால் அதன் காலடிகளில் சிக்கிச் சீரழிவன மிகப்பல என்றார். இவ்வாறு வரி அதிகம் கூடாது என்ற நல்லகருத்தை நாட்டினர் மனதில் ஏற்றிக்கொள்ளவேண்டும். இவ்வாறு அரசியல் வழிவகுத்த வள்ளுவர் இன்னும் பிறவற்றையுங் கூறிப்போந்தார்.

பெண்ணுக்கும் ஆணுக்கும் கற்பு உண்டென்று உரைத்தார். பெண்ணுக்குகற்பு அணிகலம் என்றார்.

இறுவாய்;- இவ்வாறு மக்கள் வாழ்வு, மணமாட்சி, குழந்தைப் பேறு, அரசியல் அங்கம் கூறிய வள்ளுவர் நூல் எல்லோர்க்கும் பொதுவானதன்றோ?

அமெரிக்க நாடும், உருஷ்யாவும் பிற நாடுகளும் இதை வரவேற்கிறதெனின் பொதுமைக் கருத்துக்கள் பல பொங்கி பூத்து வழிவதால்தான் என்பதை மறத்தல் கூடாது.

பொதுமறை-பொதுவழி என்னஎன்று எடுத்துக்காட்டிய வள்ளுவர் பொது வழியையே காட்டிச் சென்றுவிட்டார். அவர் வழி நடப்போமாக.

இளநகை

by

[பு. மா. சொக்கலிங்கம். IVth Class IV—B.]

வானவில்லைப்போன்ற பல வண்ணங்களைக் கொண்டு நளினமாக அசையும் டிஸம்பர் பூவைவிட, சுற்றி இருக்கும் முட்களின் நடுவில் மௌனமாக மலர்ந்து சிரிக்கும் ரோஜாதான் என் உள்ளத்தில் உவகை அருவியை ஓடச் செய்கிறது. டிஸம்பர் பூ கைக்கெட்டும் தூரத்தில்தான் இருக்கிறது. அதுவும் என்னை நாடி வருகிறது அகங்காரத்துடன்! 'ரோஜா' சிரிப்பது என்னைப்பார்த்துத்தானா என்ப்து எனக்குத் தெரியவில்லை. மனதில் முதலில் ஏற்படுத்திக்கொண்ட எண்ணங்களுக்கேற்பத்தான் பொருள்கள் நம்கண்களுக்கும் புலப்படுகின்றன. எப்போதும் தூரத்தில் உள்ளபொருள்களுக்குத்தான் மதிப்பும், கவர்ச்சியும் விழைகின்ற தன்மையும் அதிகம் உண்டு என்பதற்காக நான் 'இளநகை'யைக் காதலிக்கவில்லை. அவளிடத்தில் நல்ல பண்பும் அடக்கமும் அன்பும் குடிகொண்டு இருப்பதால்தான்! ஆனால் திருமகளிடத்தில் பணக்காரி என்ற ஆணவமும், ஆங்கிலகல்வி பயில்கிறோம் என்ற அகம்பாவமும் வெறியாட்டம் போடுகின்றன- நாம் மெத்த விரும்பும் பொருள் கிடைக்காமல் இருப்பதும் வேண்டாத பொருள் நம்மை நாடி வருவதும் இவ்வையகத்தின் விசித்திர விளையாட்டுத்தானே?

இன்று மாலை நான் இங்கு வருவேன் என்று தெரிந்திருந்தும் திருமகள் "லேடிஸ் கிளப்பிற்குச் சென்றுவிட்டாள் நான் வரும் போழ்து இளநகை எத்தகைய பூரிப்பு தவழும் முகத்துடன் வாயிலில் நின்றவண்ணம் என்னைவரவேற்றாள் அவள் சொல்லிலேதான் எத்தனை இனிமை, அன்பு, பணிவு! அவளுடைய அந்த கயற்கண்கள் கருணை பொழியும் கொண்டல்களா? அவளின் துள்ளிஓடும் நடை என் உள்ளத்தில் உவகையை அளித் தருகிறதே. அவளுடைய செயல்கள் அனைத்தும் நன்கு கொழுத்த சிறுமுயல் ஓடி ஆடுவதும் போன்றன்றோ திகழ்கிறது.

" தேநீர் " என்ற குரல் கேட்டு நினைவு அலைகளிலிருந்து திரும்பினேன்.

" இங்கே அமரு இளநகை .... நிற்கிறாயே "

" ஏன் உங்கள் கால்கள் வலிக்கிறதா ?

" குறும்புக்காரியாக இருக்கிறாயே நீ."

" குறும்புக்காரர் முன்பு........

" அவள் சிரித்தாள் நானும் சிரித்தேன். இல்லை இருவரும் சிரித்தோம் அப்போதுதான் திருமகள் அங்கு வந்தாள்........ஓ! எப்போது வந்தீர்கள்........ என்று என்னை கேட்டுக்கொண்டே இளநகையைப் முறைத்துப் பார்த்து, " ஏன் அம்மா இல்லையா?... .... என்று முகத்தை சுளித்தவண்ணம் கேட்டாள். இளநகையின் முகம் வெட்கத்தாலும், வேதனையாலும் சிவந்தது. திரும்பிக்கூட பார்க்காமல் கீழே ஓடிவிட்டாள். " பெண்கள் என்றாலே பொறாமையின் உருவங்கள் தானா " என்று எண்ணியவண்ணம் அவளை முறைத்துப் பார்த்தேன். " ஆண்களே இப்படித்தான்........ பெண்கள்என்றால் உடலே குழைகிறார்கள்........" என்று வேண்டுமென்றே சிரிப்பைக் கலந்து பேசினாள். அதில் பொறாமையின் கீறல்கள் பளிச்சிட்டன. அவளின் பேச்சை தடுப்பதற்காக "தலைவலிக்கிறது" என்று கையை தலையில் வைத்தேன் அப்போது சுவைநீர் அருந்துங்கள் சரியாய்ப் போய்விடும். ஓ! இது தேநீரா! என்று கேட்டுக்கொண்டே இளநகை கொண்டுவந்த குவளையை எடுத்துக்கொண்டே போய் விட்டாள்

"சுவைநீருடன்" திரும்பி வந்த திருமகள், கையில் சில புடவைகளும் சிலதங்க நகைகளுடனும் வந்தாள். இவைகளை அவள் என்னிடம் விளக்கத்துடன் காட்டினாள். பட்டாம் பூச்சி தன் எழிற்சிறகுகளைக் காட்டி பறந்த போதிலும் அதனை பிடித்து மகிழ வேண்டுமென்று விருப்பம் இருப்பதில்லை. அதுபோலவே இருந்தது அவள் செய்கையும்........!

இரவு உணவை முடித்துக்கொண்டு மாடிப்படி ஏறும்போது, இளநகை "துண்டு வேண்டுமா?" என அவள் கையில் இருந்த 'டவலை' நீட்டினாள் 'நன்றி' என்று சொல்லி சிரித்துக்கொண்டே அதை வாங்கினேன். அவள் தன் கண்களை உயர்த்தி பார்த்து நகை சிந்தியபடி நின்றாள். கிழிந்த புடவையை அவள் உடுத்தியிருப்பதை அப்போதுதான் பார்த்தேன் அவளுக்கு என் எண்ணம் புரிந்ததோ என்னவோ, உடனே ஓடிவிட்டாள்.

மேல்மாடியில் நாங்கள் எல்லோரும் அமர்ந்து உரையாடும்போழ்து இள நகை கதவு ஓரத்தில் வந்து நின்றாள். "கூட்டிவிட்டாயா? பாத்திரங்களை கழுவிவைப்பது தானே......." என்று திருமகளின் குரல் இளநகையிடம் ஆணையிட்டது, ஒரு ஆடவன் முன்-அதிலும் தன்னை மதிக்க வேண்டும் என்றுவிரும்பும் ஆடவன் முன் ஒரு பெண்ணை அவமானக் குறையாக நடத்தினால் அவள் இதயம் ஆயிரம் வேல் பட்ட மான் போன்றுவாடிடும். என் முன்னால் அவளை வேலைக்காரியைப்போல் நடத்துகிறாயே என்ற எண்ணம் தான் அவள் கண்களை குளமாக மாற்றியிருக்க வேண்டும். கீழே இறங்கிச்சென்றவள் மீண்டும் மாடிக்கு வரவேயில்லை.

பணமில்லாதவர்கள் இவ்வையகத்தில் அடிமைகள்தானே? அழகு; அன்பு, பண்பு. இவைகள் பணம் இல்லாவிட்டால் மதிக்கப்படவில்லை! ஏட்டிலேதான் இவைகளுக்கு மதிப்பு! ஆனால் நாட்டிலே...! விசித்திரமான உலகம்...!

திருமகள்

இவ்வுலகத்தில் எல்லாப் பொருள்களும் விந்தையாகத்தான் தோன்றுகிறது. தான் விரும்பும் பொருளை அடைய வேண்டுமென்பதற்கு முன் தன்னிடத்தில் அதற்கேற்ற தகுதி, திறமை இருக்கின்றனவா என்று பார்த்தல் வேண்டாமா! அந்தஸ்த்திற்கு மேற்பட்ட காதல் கானல் நீரை நம்பி ஓடி ஏமாறும் மானின் நிலை தானே! இளநகை என்னைப் பார்த்து பொறாமைப்படுவதில் என்ன பயன். அவர்தான் அவளைக் காதலிக்கமுடியுமா "வைரம்" எளிதாக கிடைக்கும்போழ்து சாதாரணக "ரங்கோன் டைமண்டை" யார் விரும்புவார்கள்? "மாளிகை"யில் குடியிருக்க வசதி கிடைத்தபின் "குடிசைக்கு"ப் போய் வாழவேண்டும் என்பதைப் பற்றி யார்தான் சிந்திப்பார்கள்?

என்னைப்போல் பளபளக்கும் பட்டாடைகள்-ஜொலிக்கும் நகைகள்-குலுங்கும் பொன்வளையல்கள்-இவைகள் அவளிடத்தில் உண்டா? இப்படி இருந்தும் அவள் என்னுடன் போட்டிப்போடுகிறாள்!

பாவம் என்று பரிதாபப் பட்டு வளர்த்தால் எனக்கே பகையாக முடிகிறது. நல்லவேளை அம்மாவும் இதை உடனே கவனித்து ஒரு வழியாக இளநகையை அவள் இல்லத்திற்கே அனுப்பிவிட்டார்கள். தொலைந்தது சனியன்!

அதோ அவரே வருகிறாரே! இதிலென்ன ஆச்சரியம்? அவர் என்னைத் தானே நாடி வரவேண்டும்.

"உன் வரவேற்பு இருக்கட்டும். இளநகை ஏன் திடீரென்று அவள் இல்லத்திற்குச் சென்றுவிட்டாள். அவரிடம் கேட்டதற்கு அவளுக்கு உடல் நலம் சரியில்லை என்று சொன்னார்களே; என்ன உடம்புக்கு............"

"அப்பப்பா! எவ்வளவு கருணை நீங்கள்தான் பல பிறவிகளுக்கு முன் புத்தர் பிரானாக பிறந்திருக்கவேண்டும்............"

"போதும் கேலிப்பேச்சு. சாதாரணமாக எந்தக்குழந்தை இடறிவிழுந்தாலும் பார்க்கும் மானிடர் பரிதாபம்கொள்ளவே செய்வர். அதிலும் தன் சொந்தக் குழந்தை இன்னலுக்கு ஆளாகிறது என்றால்............"

"ஒரு பெண்ணிடம் ஒரு ஆடவனுக்கு இருக்கவேண்டிய பரிவு, தன் காதலி

யிடம் முதலில் காண்பிக்கப்பட்ட பின்பு தானே ''

சரியாகச் சொன்னாய் நீ. தனக்கு வேண்டிய பொருள் இன்னல்படும்போது தானும் இன்னலில் அகப்பட்டவன் போன்று துடிப்பது இயற்கைதான்.''

நீங்கள் பேசுவது............

''இன்னும் புரியவில்லையா........ இதி லென்ன புதிர் இருக்கிறது. இளநகையை நான் நேசிக்கிறேன். அவளுக்கு வந்துற்ற இடர் எனக்குந்தானே. அவளை இன்பப் பாதையில் அழைத்துச்செல்வது என்............''

போதும். நிறுத்துங்கள்........

நான் விம்மி அழுதேன். அவர் என்னைத் தேற்றுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் சட்டை செய்யாது போய்விட்டாரே! பணம், கல்வி அழகு-இவற்றின் முன்னே அவரின் காதல் நிற்கிறதா என்று பார்க்கிறேன்.

இல்லை அவசரப்படக்கூடாது அவசரம் அழிவிற்கு முதற் படிக்கட்டு அவர் எந்தப்பொருளை மதிக்கிறரோ அந்தப் பொருளே அவரை அலட்சியம் செய்தால் ...! குளிர் தென்றலாக இருக்கும். இளநகையை அவருக்கு உலைக்கூடமாகக் காட்டுகிறேன்.........!

இளநகை

முத்துக்களை சிதறி இருக்கும் மண்டபத்தில் உலாவருபவன் 'நிலவன்' என்பதற்காக, சேற்றின் அருகில் மலரும் குமுதம் அவனைக்கண்டு குறுநகை புரியாமலா இருக்கிறது? ஒளியாடை பூண்டு விண்ணில்பவனிவரும் இளம்பரிதியிடம்தானே சேற்றின் நாப்பண் மலரும் தாமரையாள் காதல் கொண்டுள்ளாள். தனக்கு அந்தஸ்து இருக்கிறதா? இல்லையா என்று பார்த்தபின்பா சூரியகாந்தி பகலவன் பக்கம் தன் நாட்டத்தைச் செலுத்துகிறது? ஏழை என்பதற்காக நான் காதல் செய்யக்கூடாதா? காதல் என்ன பட்டாடையா? வைரநகையா? பணக்கார வீட்டில் மட்டும் இருக்கவேண்டும் என்பதற்கு? காதல் என்பது ஓர் உள்ளுணர்வு அது இன்னருக்குத்தான், இன்னவரிடத்தில் தான் எழவேண்டும் என்ரு நியதி வைத்திருக்கிறது. விழிகள் ஒன்றோடொன்று சந்திக்கிறது--உருவம் மனத்திரையில் ஓவியமாகப் படிகிறது பழகப் பழக ஓவியம் எழிலுள்ள வண்ண ஓவியமாக-அஜந்தா சித்திரமாக மாறுகிறது. இதுதானே காதல்!

நான் என்ன போட்டியா போடுகிறேன். என் அந்தஸ்த்து எனக்குத்தெரியுமே. மேலும் அவர் திருமகளுக்கு உரியவர் என்பதை முன்பே முடிவு செய்யப்பட்டது என்று கேள்விப் பட்டிருக்கிறேனே! அதனல்தானே எட்டி நின்றே பழகியிருக்கிறேன். கல்வி, அழகு, செல்வம் ஆகிய மூன்று திருவும் உடையவள் தானே திருமகள். பின்பு ஏன் அவரை அவளால் வசப்படுத்திக் கொள்ள முடியவில்லை? அவர் என்னிடம் பழகுவது போல திருமகளிடம் ஏன் பழகுவதில்லை? படித்தவள் என்ற அகங்காரமும், பணக்காரி என்ற அலட்சியமும், அழகி என்ற மமதையும் முள்வேலிகளாக படர்ந்துள்ளதுதான் காரணம் போலும்!

நான் என்ன உணர்ச்சிகள் இல்லாதவளா? ஒரு ஆண்-அதிலும் நான்மெத்த மதிக்கும் ஒரு ஆண்-என்னை நோக்கிவருவாரானல் அமைதியாகவா என்னல் இருக்கமுடியும். வானவில்லைப்போன்று வண்ணம் கொண்டு பறந்துவந்த பைங்கிளி என் கையில் அமரும் போது, "அதை போ'' என்று துரத்த முடியுமா?

''யார் அது கதவைத் தட்டுவது........''

ஆ! திருமகளா? வாம்மா தனியாகவா வந்தே ''

ஆமாம் இளநகை நீ எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். நீ செய்வாய் என்ற நம்பிக்கையில்தான் வந்தேன்.

''என்ன திருமகள். உனக்கா செய்ய மாட்டேன். உனக்கு நான் கடமைப்பட்டவளாயிற்றே........என்னம்மா வேண்டும். ''

''வேறெதுவும் இல்லை. என்னுடைய மணிப்புறு உன் இல்லத்திற்கு வந்துவிட்டது. அதை திருப்பித்தா என்றுதான் கேட்கிறேன்........''

'' மணிப்புறுவா? அது என்ன திருமகள். ஒன்றுமே புரியவில்லையே.''

"வேதனையை வளர்க்காதே இளநகை. உனக்குத் தெரியாதா இளங்கோ என்னுடையவர் என்று......."

"யார் இல்லை என்றார்கள்....... ......"

"இளநகை· நேரடியாகவே கேட்கிறேன். அவர் எனக்கு என்றுதானே வளர்கிறார். நானும் அவரையேதானே நம்பியிருக்கிறேன் இடையில் நீ.......

தடையாக இருக்கிறேன் என்கிறாயா? என்ன திருமகள் அழுகிறாயே. என்னால் உனக்கு கவலை வராது......."

"இளநகை நான் உனக்கு ஏதாவது உதவிசெய்திருக்கிறேன் என்றால் அந்த உதவியின் பேரால் கேட்கிறேன்........"

"என்ன திருமகள் இது. எழுந்திரு. நீ ஏனம்மா என் காலில் விழவேண்டும்.... இனி நான் உனக்குத் தடையில்லை ....

அவள் போகிறாள். நான் அவள் இல்லத்தில் தான் வளர்ந்தேன். நான் அவளுக்குக் கடமைப்பட்டவள்தான். என்னை படிக்க வைத்ததே அவர்கள்தானே....... மேலும் என்னைத் திருமணம் செய்து கொண்டால் அவருக்கு என்ன இருக்கிறது.

ஆ! காதலை தியாகம் செய்வது! ஒரு பெண்ணிடம் எதைக்கேட்டாலும் தருவாள். ஆனால் தன்னுடைய காதலை தியாகம் செய்ய விரும்பாள். இதற்காக வையகத்தையே எதிர்க்கவேண்டுமென்றாலும் மலையன்ன துன்பச்சுமையை ஏற்க வேண்டுமென்றாலும் தயங்காள். அஞ்சாள். என் இதயத்தையே அல்லவா கேட்கிறாள், என்னால் எப்படி தரமுடியும் இல்லை, முடியாது ....

இளநகை! நன்றாக சிந்தித்துப்பார். உனக்கு அவர்கள் தந்த அறுஞ்சுவை உணவும், காட்டிய அன்பும், வளர்த்த பாங்கும். ஊட்டியஉவகையும் கொஞ்சமா நஞ்சமா? உன்னை எட்டாவது வரையில் படிக்கவைத்ததுயார்? இவ்வளவு ஏன? உன் அழகையே கேட்டுப்பார்? இங்கிருந்தால் நீ இவ்வளவு எழில் பிழம்பாக இருக்கமுடியுமா? வறுமைத்தேனின் கொட்டுதலினால் அழகை மட்டுமா இழந்திருப்பாய்! ஆளேயல்லவா மாறி இருப்பாய். உன்னைக் காத்து வளர்த்து அன்பு செய்வதற்கு நீ செய்யும் பிரதி நன்றி இதுதானா?"

ஐயோ! ஏ மனச்சாட்சியே! போதும் என்னை மேலும் துன்புறுத்தாதே!

"சோறு போட்டு வளர்த்தான் என் பதற்மாக நாயும் தன் உயிரை மதிக்காது எஜமானனைக் காக்க துணிகிறதே. நாயினும் கீழானவளாகி நீ அவரை மணப்பதினால் என்ன நன்மை. சிந்தித்துப்பார்.......

இல்லை. நான் அவளுக்குத் தடையாக இல்லை. நான் அவர்கள் சோலையினுள் உலவினது உண்மைதான் கனி கிடைக்குமா என்று? இல்லையே! கனி தானாகவே என் கரங்களில் விழும்போது, அதை விட்டுவிட முடியுமா? அதுவும் நான் மெத்த விரும்பும் கனியை!

"பேதைப் பெண்ணே; அதுதான் தியாகம். தியாகம்தான் அன்பின்-காதலின் சிகரம். அந்த சிகரத்திற்குப்போக ஏன் அஞ்சுகிறாய்? தன்னிடம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளை வைத்துக்கொண்டு அதில் ஒன்றை ஈந்து விடுவது தியாகம் அல்ல. அதிகமான் அவ்வைக்கு நெல்லிக் கனி கொடுத்தானே அதன் பெயர்தான் தியாகம் அத்தகைய தியாகத்தை செய்ய நீ ஏன் அஞ்சுகிறாய்"

மனமே! மோசம் உன்கட்டளைப்படியேநடக்கிறேன். பயித்தியம் பிடித்திடும் போல் இருக்கிறது!

இளங்கோ

என் திருமணத்தை விரைவிலேயே முடித்துவிடவேண்டும். இல்லையென்றால் திருமகளால் ஏதாவது ஊறு நிகழலாம் இப்போது அவளது சினம் இளநகையின் மீதுதான் திருப்பப்படும் இன்று மாலையே இளநகையைச் சந்திக்கிறேன்.

"என்ன இளநகை "வான் ஆராய்ச்சி' நடத்துகிறாய்.......

வா! அத்தான். ஏது திடீர் விசயம்.... என்று அவள் சிரிக்கும்போழ்து அன்றலர்ந்த தாமரையைவிட மிகவும் அழகாக இருந்தது.

ஏன் முன்னெச்சரிக்கை செய்து விட்டுத்தான் வரவேண்டுமா? .

"முன் எச்சரிக்கையாக நான் நடந்து

கொள்ள வேண்டாமா? அதற்காகத் தான்."

"நானென்ன புதிய மனிதனு. என்னிடம் முன்கூட்டியே ஒழுங்காக நடப்பதற்கு..........."

பெண்களுக்கு அவளின் கணவனிடத்தில் தவிர வேறு யாரிடமும் முன் எச்சரிக்கையாகத்தானே நடந்துகொள்ள வேண்டும்.'?

இளநகை! சுருக்கமாக என்னைத் தவிர என்று சொல்லேன்.

"வேறொருவருக்கு உரிமையான பொருளை என்னுடையது என்னுடையது என்று எப்படிச் சொல்வது..... ?

"நீ பேசுவது குழப்பமாகவே இருக்கிறது........"

"ஆமாம் நான் வேறொருவன் பொருளாகப் போகிறவள் நீங்கள் என்னிடம் இப்படி பழகுதல் கூடாது?

"இளநகை என்ன விளையாடுகிறுய்....!

"எனக்கு அடுத்தமாதம் திருமணம். அப்பா நிச்சயித்து விட்டார். பிள்ளை நல்ல இடம்தான். படித்தவர் பண்புள்ளவர் எனக்கும் மெத்தப் பிடித்துவிட்டது

"இளநகை......."

"மணம் ஆகப்போகின்ற பெண்ணிடம் தனித்து இவ்வளவு நேரம் பேசுவதே நீங்கள் செய்யும் தவறு.......ஏன் நிற்கிறீர்கள்....விரும்பாத ஒரு பெண்ணிடம் பேச உமக்கு வெட்கமாய் இல்லை....

சே! இளநகை இப்படி இருப்பாள் என்று எனக்குத் தெரியவில்லை. கடைசியில் நான் வரும்போது கூறினளே! "பஞ்சுச் செடியில் உள்ள இலவம் பழத்தை கொவ்வைப் பழம் என்று இனி ஏமாந்தால் அதற்கு இலவம் பழமா பொறுப்பாளி" எவ்வளவு திமிர்! பெண்களே புதுமையானபொருள்கள் மயிலின் கழுத்து என்ன நிறம் என்று வேண்டுமானுலும் அறிந்துகொள்ளலாம், ஆனல் பெண்களின் இதயத்தை அறிந்து கொள்ளமுடியாது. நிலவைவிடவிண்மீன் பெரியது ஆனல் நம்மைவிட்டு வெகு தூரம் சென்றபின்பு நிலவுக்குள்ள மதிப்பும் அதற்கிருக்கிறதா? அதிக நறுமணம் உள்ளது என்பதற்காக ஓரத்தில் உள்ள முட்களைப்பற்றி கவலைப் படாமல் ஆசையுடன் எடுக்கப்போனுல், அதன் நடுவில் பாம்பு நெளிகிறது என்றல் கையிலுள்ள தாழம்பூவை வீசி எறியாது வேறு என்ன செய்ய முடியும்?

இளநகை:— தன்னை தூக்கி மகிழ்வாள் என எண்ணி ஓடி வரும் குழந்தையைக் கண்டவுடன் பராமுகமாக இருந்தாலும் பரவாயில்லை. அடித்து துரத்தினல் அதனுடைய மனநிலை எப்படியிருக்கும். இந்த மனநிலைக்கல்லவா என் ஆருயிர் அத்தானை ஆட்படுத்திவிட்டேன், அத்தான்! உங்களை நான் காதலிக்க எனக்கு உரிமையில்லை.

அதிர்ஷ்டம் என்ற பெண் குருடாகத்தான் இருக்கவேண்டும். இல்லையென்றல் அவளை வேண்டாதவர்களை நோக்கி ஓடுவதும், அவளை நாடியிருப்பவர்களுக்கு கிட்டாமலும் இருப்பாளா? இதே என் கையில் தவழும் இந்தத்திருமணப் பத்திரிகை—என் வாழ்வை இடித்து தூளாக்கும் பெரிய இடி! திருமகளுக்கும் இளங்கோவனுக்கும் திருமணம்! என் காதல் சமாதியின் மேல்தான் அவர்களின் வாழ்வு மாளிகை எழும்புகிறது!

நாளை இளங்கோவன் அருகில் திருமகள் மணப்பந்தலில் அமர்ந்திருப்பாள். அவளுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்திருக்கும். நெருப்புச்சொற்களை அவர் மீதுவீசி அவரின் மனதை மாற்றினேன். ஆனல் அவற்றை எடுத்து வீசும் போது என் உள்ளத்தில் ஏற்பட்ட தீப்புண்கள்........! இனி என் உள்ளத்திற்கு அமைதி ஏது? ஓயாத சூறுவளிதான்.......!

விழியிலே நீரும், உள்ளத்தில் வேதனையும் தான இயற்கைஅன்னை ஏழையின் கருவூலங்களாக அளித்திருக்கிறள். என் ஆசையெல்லாம்—இன்பமெல்லா--ஊமை கண்ட கனவுதான்—முடவன் தேனுக்கு ஆசைபட்ட கதைதான்—கானல் நீரை நம்பி ஓடிய மானின் வேதனைதான்!

கலித்தொகையும், அகமும், சிலம்பும் படித்தேன். இவைகள்தான் என்னை இத்தியாகம் செய்யத்தூண்டிற்று! அதோ அந்த அலமாரியில் என்னை இக்கதிக்கு ஆளாக்கிய புத்தகங்கள். அவைகளைப் பார்த்து நான் சிரிப்பதா? அழுவதா

‘அமைதி எங்கே’?

by

V. பால சுப்ரமணியம் II—Class I-Group

1

சிணு சிணுத்தவாறு பெய்த மழை விட்டிருந்த வேளை. வானமும் சிறிது சிறிதாக துலாம்பரமாகிக் கொண்டிருந்தது. எல்லப்பனின் மனம் எதெது பற்றியோ சிந்தனை செய்து மறுகிக்கொண்டிருந்தது. அவன் மனம் நடந்துபோன சம்பவங்களை ஒரு கணம் நினைத்தது. இரு நாட்களுக்கு முன்னர்; இதோ, அவன் மனதைப் போலவே வெறிச்சோடி போயிருக்கும் எதிரே இருந்த திடலில் ஓர் கலவரம் நடந்திருக்கிறது. ஏழைப்பங்காளனை செல்வன் என்பவனை யாரோ சில பணம் பெருத்த போக்கிரிகள் கையப் புடைத்தனரே! அவன் மனம் இரக்கத்தான் பட்டது.

> தன் தாய்கூட அந்த செல்வனைப் பார்த்தபோதெல்லாம், ‘அவனைப் பார்த்தால் நல்லப்பன் போலவே இருக்கிறது’ என்று அடிக்கடி கூறுவாளே, என்று எண்ணிற்று.

அவன் மனம். உடனக்குடன் தன் மனதிற்குள்ளாகவே அதனை மறைத்து புதைத்து விடுகிறாளே, ஏன்? எனவும் எண்ணிற்று யார் அந்த நல்லப்பன்....?

இந்தச் சிந்தனையை இப்படியே அந்தரத்தில் விட்டு தாயைக் காப்பாற்றும் வகையைப் பற்றி எண்ணுவானாயினன்.

> நேரிய முறையில் வாழவேண்டும் என்ற சிந்தனையே அவன் மனதில் பண்பாக உறைந்திருந்தது.

என்றோ ஒரு நாள் யாரோ ஒருவர் தவறி தம் ‘மணிபர்ஸை’ ரிக்ஷாவில் மறந்து வைத்துவிட்டார். அதை அவன் திருப்பி ஒப்படைத்துவிட்டான்.

இத்தகைய நல்ல செயல் வெளிப்படக் கூடிய அறவுரைகளை அந்த செல்வன் தானே தந்தான். பாவம்! அவனைக்கூட யாரோ சிலர் காயமுறச் செய்துவிட்டனரே! நல்லவனுக்கும் பகையா?

மீண்டும் அவன் மனம் தாயைப்பற்றிய சிந்தனையில் ஓடியது. அவனின் தாய் தீராத பிணியால் அவதியுறுகிறாள். இலவச வைத்திய விடுதியில் குணப்படுத்த முடியாத வியாதியாமே! பட்டம் பெற்ற வைத்தியர்களால் தாம் மட்டுப்படுத்த முடியுமாமே. அவ்வாறு வைத்தியம் பார்க்க பணம் வேண்டுமே! எவனோ ஓர் ரிக்ஷாக்கார நண்பன் கூறியது நினைவுக்கு வந்தது.

> இரத்த சேமிப்புக்கிடங்கில் இரத்தம் கொடுத்தால், ஈடாக பணம் தருகின்றார்களாமே.

ஒரு முறை அவன் மனம் யார் அந்த நல்லப்பன் என்ற வினாவை எழுப்பிற்று மறுகணம், செல்வன் நிலைக்காகப் பரிதாபப்பட்டது. தாய் பிணி தீர்க்க பணம் தேவைப்படுகிறதே, என் செய்வேன் என வருந்தியது.

> இரத்தம் கொடுத்தால், ஈடாக பணம் தருவார்களாமே.

ஓரிடத்திலிருந்து தள்ளப்பட்ட சித்தெறும்பு மீண்டும் மீண்டும் தள்ளப்பட்ட அதே இடத்திற்கே வந்து சுற்றி வளையமிடுவதுபோல், அவன் மனமும் ‘இரத்தம் கொடுத்து பணம் பெறுவது’ என்பது பற்றியே எண்ணமிடத் தொடங்கியது. தாயைக் காப்பாற்ற வேண்டுமே என கவலையும் பட்டது.

2

குடிசைக்குள்ளே வந்து எப்போது படுத்து உறங்கினானோ, தெரியவில்லை. கண் விழித்துப் பார்த்தபோது பல பல வென்று பொழுது விடிந்திருந்தது தாயைத் திரும்பிப் பார்த்தான்—

—ஆடாதோடைக் குச்சி போன்ற உடல்—ஆழக்குழி வீழ்ந்த கண்கள்—சதைப் பற்றற்றுச் சாம்பிப்போன கன்னங்கள்—குறுநுதலில் குறுக்கும் நெடுக்கும் வரிகள்.

அவன். மனம் கூம்பிப் போயிற்று. எல்லையில்லாச் சோகமும் அங்கமெல்லாம் தொய்யும்படியான துன்பமும் அவன் மனத்தைப் பாரமாக அழுத்தின. அவனைப் பெற்றதாய்—அவனுக்காக அன்புகொண்டு உலவும் ஒரே ஜீவன்-அவளுக்காகவே அவன் உழைக்க வேண்டிய நியதி இருக்கிறது. அந்த ஒரு ஜீவன் மட்டிலும் இல்லையென்றால் அவன் எங்கே தத்தாரியாக இருப்பானோ?

உற்றார் பெற்றோர் இல்லாது உலகிலே குற்றவாளிகளெனப் பெயரெடுத்த எத்தனையோ அப்பாவிகளில் அவனும் ஒருவனாகத்தான் எண்ணப்படுவான். இவ்வாறு பலசம்சயங்கள் அவன் உள்ளத்தைச் சஞ்சலப்படுத்தின.

“எல்லப்பா....... எங்கேயடா....... போனாய்.......?”

தாயின்வேதனைதோய்ந்த குரல் அவனை உலுக்கியெடுத்தது.

“ஏனம்'மா........இங்கேதா(ன்) இருக்கிறேன்........”

ஆவணிமாத அடை மழை அவன் தாயின் பிணியை அதிகப்படுத்திவிட்டது-காசநோயால் அவதியுறுகிறாள். அதுவும் பெருஞ்செல்வரும் தீராத-ஏகப்பட்ட பொருளைச் செலவிட்டு அடிக்கடி மட்டுப்படுத்திக் கொள்ளத்தக்க பிணி! இந்நிலையில் ரிக்ஷா இழுத்து வாழ்வு நடத்தும் எல்லப்பன் எங்கு செல்வான் அந்தப் பணத்துக்கு?

இரத்தம் கொடுத்து பணம் பெற்றாலொழிய தாயின் பிணி தீராது என்று உணர்ந்தான். தன்னுடலையே ஓர் முறை நோக்கினான்; உழைப்பளித்த உரமாக இருந்தது. தாயைப்பார்த்தான். கண்களை மூடியபடி இருந்தாள். துன்பத்தை ஓர் சிறிதே மறக்கச் செய்யும் அந்தத் துயிலைக் கலைக்க விரும்பாது வெளியே வந்தான்.

தூரத்து மாடிவீட்டுக்கு முன்னர் பந்தல்கால் நட்டு மறுநாள் நடக்கவிருக்கும் திருமணத்திற்கான ஆயத்தங்களைப் பல ஆட்கள் செய்து கொண்டிருந்தனர். எல்லப்பன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு, இரத்தச் சேமிப்புக் கிடங்குக்குச் செல்ல எண்ணியபடி நடந்தான்.

3

டாக்டர் சுந்தரம் எதையோ யோசித்துக்கொண்டிருந்தார். அவர்முகத்தையே ஊன்றிப் பார்த்தவண்ணம் செயலற்று நின்று கொண்டிருந்தார் அழகப்பப் பிள்ளை. தமது செல்வ மகன் துவண்டு படுத்திருந்த நிலை அவர் மனத்தின் பதைபதைப்பை அதிகப்படுத்திற்று. ஏழைகள் சார்பில் நியாயம் பேசி, ஓர் தனவந்தரின் அட்டூழியத்தைக் கண்டித்து எதிர்த்தானும். நடந்த கலவரத்தில் கைகலப்பு ஏற்படாது தடுத்த தன் மகனை, செல்வனை ஓரளவே பிரபலமான அந்த தனவந்தர் தம் வலிமையால் அந்நிலைக்குள்ளாக்கியது கேட்டு, அந்தத் தனவந்தரைச் சரியான மட்டம் தட்ட எண்ணினார். கோர்ட்டு நீதி அவர் பக்கமே பேசியது. ஆனால் தண்டனையை அனுபவிக்கவேண்டிய அந்தப் பிரமுகர், பணவலி, இனவலி முதலியவற்றால் மீட்சி பெற்றுவிட்டார். அழகப்பருக்கு தன் மகனின் நிலையையே கவனிக்கும்படியான அவசியம் ஏற்பட்டுவிட்டது.

“பிள்ளையவர்களே, என் முயற்சியெல்லாம் முடிந்து விட்டது, இரத்தம் ஏகமாக வெளியேறி இருக்கிறது. உங்களின் இரத்தமோ, உங்கள் மகனுக்கு ஏற்றதாக ஒத்துவரவில்லை. எங்குமே காணாத வியப்பாக இருக்கிறது....ஒரு வேளை....”

டாக்டர் மேலே கூறத் தயக்கமடைந்தார். அழகப்பர் ஓர் முறை சோர்வால் உறங்கிக்கொண்டிருக்கும் தன் மகனைப் பார்த்தார். டாக்டர் சுந்தரத்தை அறைக்கு வெளியே அழைத்துச் சென்றார். எங்கோ கிணற்றின் உள்ளிருந்து பேசுவது போல் கூறத் தொடங்கினார்.

“...டாக்டர், நீங்கள் சந்தேகப் படுவது நியாயமே. இருபது ஆண்டுகளுக்கு முன்

னர் நான் என் மனைவியை இழந்து, இரண்டாம்தாரம் அடைந்தும் மகப்பேறு பெருதவனுகி விட்டேன். டாக்டர் நான் புறநானூற்றில் ஓர் செய்யுள் படித்திருக்கிறேன். அதைப் போன்றிருந்தது என் வாழ்வு அப்போது,

'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்ப்பட
விதிர்த்து மயக்குறு மக்களையில்
லோர்க்குப் பயக்குறை யில்லைத்தாம்
வாழு நாளே'

என்ற செய்யுள்தான் அது. எவ்வளவு உண்மை! என் மனைவி, வீட்டு வேலைக்காரி முத்தம்மாள் என்பவள் தன் கணவனை இழந்து இரு குழந்தைகளுடன் வறிய நிலையில் வாழ்கை நடத்துவதைச் சகிக்காது, அவளுடைய இளையபிள்ளையை அவள் அனுமதி பேரிலேயே தத்து எடுத்து வளர்க்க ஆரம்பித்தாள். அப்போது வேலூர் அருகாமையில் ஓர் கிராமத்தில் இருந்துவந்தோம். பின்புதான் இந்தச் சென்னைக்கு வந்துவிட்டோம். நான் முத்தம்மாளைப் பற்றிப் பின்னர் அறிந்துகொள்ள இயலவில்லை.

அவளின் இளையபிள்ளையை—நல்லப்பன் என்றோ எல்லப்பன் என்றோ பெயர்—அவனைச் செல்வன் எனப்பெயரிட்டு முழு அன்பைச் சொரிந்து வளர்த்தோம். மூன்ருண்டுக்கு.

முன்னர்தான் என் மனைவி இறந்தது தங்களுக்குத் தெரியுமே; செல்வனை வளர்ப்பு மகனுகவாவது பெற பாக்கியம் செய்தோமே என்று மகிழ்ந்தேன். நான் எப்படி ஏழைகள்பால் அன்புடன் தொண்டு செய்கிறேனே, என் பெயர் விளங்க அவனும் அவர்கள்பால் மட்டற்ற அன்புடன் இருக்கிருன். அந்த வரம்பில்லாத அன்பு மகனை இப்படியாக்கி விட்டதே....டாக்டர். அவன் பிழைப்பானு? அவன் போய்விட்டால் எனக்கு அமைதியே இருக்காது. டாக்டர், எனக்கு வாழ்வே இல்லை அவன் போய் விட்—'' சுந்தரம் குறுக்கிட்டார்! "....அப்படியெல்லாம் பேசி மனதை அலட்டிக்கொள்ளாதீர்கள்....செல்வனுக்கேற்ற இரத்தத்தை அவன் உடம்பில் ஏற்றச் செய்கிறேன். என் நண்பர்தாம் இரத்த சேமிப்புக் கிடங்கின் அதிகாரி. வைத்திய விடுதியும் அங்கேயே வைத்திருக்கிருர்கள். நம் கையால் ஆகவேண்டிய முயற்சிகளை செய்து பார்ப்போம் பிள்ளை. நம்பிக்கைக்கு இன்னும் இடம் இருக்கும்போது நன்ருக நாம் முயற்சியுடன் செயலில் இறங்கித்தானேயாக வேண்டும். நீங்கள் கவலை--''

".......அப்படியானல் வாருங்கள் டாக்டர், இப்போதே போகலாம். செல்வனை எப்படியும் பிழைக்க வைக்க வேண்டும்.''

அடுத்து சில நிமிடங்களுக்குப் பிறகு, 'வள்ளுவரில்லம்' என்ற பிள்ளையவர்களின் பங்களாவை விட்டு ஓர் பாண்டியாக் கார் பாய்ந்து பாதையில் சென்றது.

4

எல்லப்பனை ஓர் நர்ஸ் தட்டியெழுப்பினள். "ஐயா ஓய்வு பெற்றது போதும்; இனி போகலாம்.''

சிறிது நேரத்திற்கு முன்புதான் தான் தானமாகக்கொடுத்த இரத்தத்தின் தனமாக, தன் அரைக்கச்ச வேட்டியில் முடித்து வைத்திருந்த பணத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். தாயைக் காப்பாற்ற ஓர் வகை தேடியாகி விட்டது என்ற உணர்வு அவனுக்கு ஊக்கம் கொடுக்க, எழுந்து டாக்டரிடம் விடை பெறுவதற்காக வெளியே வந்தான்; பார்த்தான்.

யாரோ ஓர் தனவந்தர். அவருக்குப் பின்னல் மற்ரோர் டாக்டர். இரு நர்ஸ்கள் எவரையோ ஸ்டிரெச்சரில் படுக்க வைத்துத் தூக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

எல்லப்பன் டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு வெளிப்புறம் நோக்கிநகர்ந்தான். தன் மீதே நிலை குத்திப்பதிந்திருந்த அந்தத் தனவந்தரின் பார்வையை அவன் கவனிக்கவில்லை.

அந்தத் தனவந்தர்-அழகப்பப்பிள்ளையவர்கள். செல்வனும், அவனும் ஒரே சாயல்--அவன் முரட்டுத் தேகத்தோடு வறிய நிலைக்கேற்பப் பாங்காக அமைந்த

உடல் வனப்போடு இருந்தான். செல்வன் செல்வச் சூழ்நிலைக்கேற்ப மென்மையாக இருந்தான்.

இடையில் சுந்தரம், இரத்தச் சேமிப்பு டாக்டரிடம் யாவையும் விளக்கினர்.

"வாருங்கள் பிள்ளைவாள் போவோம் !! என்று டாக்டரின் குரல்கேட்டு, அவரைப் பின் தொடர்ந்து செல்வன் கிடத்தப் பட்டுக் கிடக்கும் ஆறும் எண் படுக்கை யறையை நோக்கி நடந்தார்.

5

எல்லப்பன் இரத்தம் கொடுத்துப் பெற்ற தொகை ஐந்து ரூபாயிலிருந்து, நான்கு ரூபாயை எண்ணி டாக்டரிடம் கொடுத்தான். ஏதோ ஓர் மருந்தின் பெயரைச் சீட்டில் எழுதிக் கொடுக்க, எல்லப்பன் அதை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

"இனிமேல், ரொம்ப சீரியஸா பார்த்துக்க. இந்த மருந்தைஉடனே வாங்கிக் கொடுத்துண்டுவா" அவர் போய்விட்டார்.

"ஏம்'மா இப்போது எப்படி இருக்கு"

"ஊம். என்னமோ....போ...உன் ஆசைப்படி. நான் பிழைச்சி எழுந்தா அதுவே போதும்..ஆனு, போகற கட்டையை யாராலும் தடுக்க முடியாது. நீயேண்'டா கஷ்டப்படறே... இந்தச் சமயத்தில் உனக்கு ஒத்தாசையா உன் தம்பி இருந்தால்—"

"... என்னம்'மா... உளறுகிறே ... தம்பியாவது, எனக்காவது..."

"...இல்லே எல்லப்பா ... உனக்கு ஓர் தம்பி உண்டு... அவன் பேர் கூட நல்லப்பன் என்றுதான்."

தொடர்ந்து, தான் நல்லப்பனை தான் வேலை செய்து வந்த வீட்டு எசமானிக்குக் கொடுத்துவிட்டதையும், அவர்கள் பின்னர் எங்குச் சென்றனர் என்று தெரியாது என்றும் சென்னைக்கு வந்த விருத்தாந்தத்தையும் கூறினள். மேலும், கூறலானுள்.

"...நம்மைப் போல நிர்க்கதியான ஏழைகளுக்கு ஒதவி செய்யற அந்தச் செல்வனைப் பார்க்கிற போதெல்லாம் உன் தம்பி நல்லப்பன் ஞாபகமே வருகுது.. பாவம்! அந்தப் பிள்ளையைக்கூட யாரோ அடிச்சிட்டாங்களாமே......"

"......அம்மா...எனக்கு தம்பி ஒருவன் உண்டு. என்பதை இப்போதாம்'மா தெரிந்துகொண்டேன்....அந்தச் செல்வன்தான் நல்லப்பன் என்பது என்ன நிச்சயம்....உம்........இனிமேல் தம்பியைப் பற்றி நினைச்சு என்ன பிரயோசனம்.... அவனாவது நல்லபடியா சுகமாருக்கட்டும்....அவ்வளவுதான்......."

"..... எல்லப்பா....போன ரெண்டுமாதத்துக்கு வேறே ரிக்ஷாவிற்கு வாடகை கொடுக்கவே இல்லேயே. முதலியார் கோவிச்சுக்கப் போறுர்....இதோ இந்த ஆவணி மாதமும் முடியப் போவது........ உம்....இந்தச்சமயம் பார்த்தா நானும் படுக்கையில் விழணும்....போ.......சவாரி கிடைக்குதான்னு பாரு...."

".... இல்லேம்'மா.... இன்னிக்கு என்னமோ ஒரடியா சோர்வாயிருக்கு !!

எல்லப்பன் துண்டை விரித்துப்போட்டுப் படுத்துக்கொண்டான். அவன் தனக்காக இரத்தம் கொடுத்து வைத்தியம் பார்த்ததன் சோர்வுதான் என்பதை அறியாத முத்தம்மாள் வியப்புற்றுள் தன் மகனின் வழக்கத்திற்கு மாறான செயலைக் கண்டு.

பகல்பொழுது கழிந்து வெகு நேரம் வரைக்கும் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தன இரு ஜீவன்கள்.

6

அன்று மாலை; செல்வன் உடம்பில் எல்லப்பனின் இரத்தமே ஒத்துவரவே, அதுவே ஏற்றப்பட்டது. என்ருலும் சிறிதளவே தேர்ந்தான் செல்வன்.

ஒரு சில வேலைகளில் செல்வன் தன் வசம் இழந்து எதெதெனையோ பிதற்றும் நிலையை அடைகையில் உயிருக்கே உலை வந்துவிடுமோ என்ற அச்சம் டாக்டர் உள்ளத்தை அலைக்கழித்துக் கொண்டுதான் இருந்தது.

"....டாக்டர்....", அழகப்பர் உள்ளே நுழைந்தார். 'ஏன்' என்ற முகக்குறியுடன் நிமிர்ந்தார் டாக்டர்.

"....அவனைப்பற்றிக் கவலையில்லையே டாக்டர்......."

என்னய்யா....நீர்....எல்லா முயற்சியும் செய்துதான் இருக்கிறோம். எல்லாம் அவன் கையில் இருக்கிறது என்று சிலர் சொல்கிறப்போல; அவன் உயிரும் அந்த வழியில்தான் இருக்கிறது...." ஆறுதலுக்காகக் கூறவேண்டுமே என்பதற்காக,

"....அமைதியாயிருங்கள் பிள்ளைவாள்...."

"....என்ன டாக்டர், எனக்கேது அமைதி செல்வன் தேறி எழுந்திருக்கு மட்டும்; செல்வனின் நெருங்கியநண்பன் அவனுடைய திருமணத்திற்கு வரச் சொன்னான்....செல்வன் நிலை தெரிந்து என்னை அழைத்தான் செல்வனும் என்னை போகச்சொல்லுகிறான், அவன் மனம் நோகக் கூடாது என்பதற்கு—"

டாக்டர் குறுக்கிட்டார்!! தாராளமாகப் போங்கள்....அவன் மனம் எந்த விதக்குறைக்கும் உள்ளாகக்கூடாது அதைப் பார்த்துக் கொள்வதே நம் பொறுப்பு. அவன் சொற்படியே போய் வாருங்கள்......."

மறுநாள் காலை விடியலிலேயே வந்துவிடுவதாகக் கூறி அழகப்பர் சென்று வெகுநேரம் கழிந்திருக்கும். அழகப்பரின் நெருங்கிய குடும்ப வைத்தியரான சுந்தரம் செல்வன் நிலை கண்டு போக வந்திருந்தார்.

டாக்டர் வீட்டிற்குப் போக முற்படுகையில், ஓர் நர்ஸ் படபடப்புடன் ஓடி வந்தாள்.

"....டாக்டர்....அந்த ஆறும் நெம்பர் பேஷண்ட் ரொம்ப டேஞ்சராயிருக்கிறார்.....ஏதோ லெக்சர் அடிப்பதுபோல் பேசுகிறார்.....என்னவோ ஏழை பாழை'ன்னு வேறு பிதற்றுகிறார்...."

அடுத்தகணம், டாக்டர் சுந்தரத்துடன் அந்த அமைதி கொலுவீற்றிருக்கும் இரவில் கவலையைச் சுமையாக மனதில்தாங்கி ஆறும் எண் படுக்கையறையை நோக்கி விரைந்தார் டாக்டர்.

7

எல்லப்பனின் காதில் மேளச் சத்தம் விழுந்தது; எழுந்தான் நேற்றைய திருமண ஏற்பாடுகள் நடந்த வீட்டிலிருந்து வருகிறது என்று தெரிந்துகொண்டான் காலை—வெகுநேரப்பொழுது கழிந்துவிட்டிருந்தது. எவ்வளதுவு நேரம் தூங்கிவிட்டோம் என்று அலுத்துக்கொண்டான்.

இன்று எப்படியும், நேற்றைய முறையிலேயே சிறிது பணம் பெற்றுத் தாயைக் காப்பாற்ற டாக்டர் குறிப்பிட்ட மருந்தை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்தான். அந்தத் தீர்மானம் அதிதீவிரமாக அவன் மனதை ஆக்ரமித்துக் கொள்ளவே, அப்போதே எழுந்து ரிக்ஷாவை இழுத்தபடி எட்டி நடைபோட்டு விரைந்தான்.

சிறிதுநேரத்தில்தான் இரத்தச்சேமிப்புக்கிடங்கை அடைந்ததை உணர்ந்தான். இன்று வேறு ஓர் அதிகாரி. பழைய அதிகாரி இன்னும் வந்து தம் வேலையைமேற்கொள்ளவில்லை போலும்! பழையவராயிருந்தால் ஓர் முறை இரத்தம் கொடுத்த எல்லப்பனிடமிருந்து மறுமுறை இரத்தம் எடுக்க இசையமாட்டாரே!

கிரமப்படி காரியங்கள் நடந்தேறின. எல்லப்பனின் கையில் இப்போது நேற்றைய இருப்பு ஒரு ரூபாயுடன் சேர்ந்து மொத்தமாக ஆறு ரூபாய்கள் இருந்தன. டாக்டரின் நன்றி மொழிக்குக் கூடக் காத்திராது வெளியே எல்லப்பன் போய் ஐந்து நிமிடங்கள் கழிவதற்குள், பழைய அதிகாரி வந்து தம் அன்றைய அலுவலை மேற்கொண்டார். நேற்று வந்த எல்லப்பன் என்ற நபரே இன்றும் இரத்தம் கொடுத்ததன் குறிப்பைக் கண்டு திடுக்குற்றார் முதலில். பின்னர் செல்வனுக்குத் தேவைப்பட்ட இரத்தம் இவ்வாறுகிடைக்கிறது; அவனைக் காப்பாற்றலாம் என்ற எண்ணத்தால் மகிழ்வு பெற முனைந்த அதே நேரத்தில்,

"....டாக்டர்....டாக்டர்... இன்று அந்த ஆறும் நெம்பர் பேஷண்டுக்கு இரத்தம்

ஏற்றவே சரியான டயம் இல்லை....உங்களுக்காகவே வெயிட் பண்ணிண்டிருந்தேன்—''

என்ற நர்ஸின் எச்சரிக்கை அவரை ஒரு கணம் நிலை குலையச் செய்தது.

"என்ன....செல்வனுக்கா ..அவன் அவன் அப்பா வந்து விட்டாரா....?
...." நேற்று எங்கோ மேரேஜுக்குப் போயிருந்தாராம். இன்னும் அங்கிருந்து திரும்பி வரவில்லை என்று இப்போதுதான் தெரிந்தது.......''

...." இதேதடா வம்பாயிருக்கிறதே '' டாக்டரின் நெற்றி சுருங்கிக் குறுகி அங்குலியில் பாரமாக நின்றது. விரைந்து ஆறும் எண் படுக்கையறையை அடைந்தார்.

8

" ... அய்யோ .... நான் இன்னும் எட்டணு காசுக்கு எங்கே போவேன்? மருந்து விலை ஆறரை ரூபாய் என்கிறார்களே....''

என்று எல்லப்பன் ஏமாற்றம் அடைந்தான். ரொட்டியாவது வாங்கிப் போகலாமென்று எண்ணமிட்டு எட்டணுவுக்கு ரொட்டிமுதலானவற்றைவாங்கிக்கொண்டான். செயலிழந்த நிலையில் வீடுநோக்கி ஓர் நினைப்பும் இன்றி வண்டியை இழுத்துக்கொண்டு திரும்பினன்.

இப்போது அவனுடைய தாயின் பிணி தீர்க்க வேண்டிய தொகை ஒரு ரூபாய்.

அந்த ஒரு ரூபாயோ—?

9

அழகப்பப்பிள்ளை நிலைகொள்ளாமல் தவித்தார். செல்வன் பேச்சைக் கேட்டு அவன் நண்பனின் திருமணத்திற்கு வந்திருந்தார். ஆனல் அவர் மனமோ—?

திருமணம் சுகமாகவும், சுமுகமாகவும் நடந்தேறியது. ஆடம்பரத்திற்கு இடமே இல்லை. நடுத்தர நிலையுடைய இரு குடும்பத்தினரும் ஒருவருக்கொருவர் இணங்கி இணைந்து, குறையிருந்தாலும், 'நம்மைப் போன்றார் தாமே, நாமும் குறையின்றிச் செய்ய முடியுமா' என்ற எண்ணத்துடன் அமைதியாயிருக்க முயன்றனர்.

செல்வ நிலைக்கும், வறிய நிலைக்கும் இடைப்பட்ட நிலையில் உழலும்—ஆடம்பர ஆணவமின்றி, அசட்டுத்தனமுமின்றி அன்புடன் அமைதியாக உலவும் இன்பமோ, துன்பமோ வந்தாலும், விஞ்சியவளவோ. கிஞ்சித்துங் குறைத்த அளவோ கொள்ளாது மத்திய வகுப்பில் அலையும்—அவர்கள் அமைதியுடன் வாழ்வு நடத்தும் நல்லியல்பை உணர்ந்தார் அழகப்பர்.

செல்வனின் நட்பைப்பெற்ற காரணத்தால், அவன் நண்பன் ஏழைகளைமறந்துவிடவில்லை. ஏழை எளியோர்கட்கும் அன்று சாப்பாடு பரிமாறப்பட்டது. பல பிரமுகர்கள் ஆடம்பரம் பரிசுகளும், வாழ்த்தும் வழங்கியபோதிலும், வயிறு நிறைந்து உள்ளம் நிறைந்த மகிழ்வோடு வாழ்த்தும் எளிய மக்களின் ஏற்ற செயலே அழகப்பர் உள்ளத்தில் நிலைத்து நின்றது.

அவர் மனம் செல்வனைப்பற்றி எண்ணமிடத்தொடங்கியது. பின்பு அவர் கால்கள் அங்கு பாவவே இல்லை. விரைவிலேயே விடைபெற்றுக்மொண்டு திரும்பிவிட்டார். வரும் வழியில் செல்வன் அடிபட்ட அந்தத் திடலை நோக்கினர். அவர் மனம் பின்னும் வேதனைப்பட்டது.

காலை சுமார் மணி பத்து ஆகியிருந்தது. விரைவில் வருவதாகக் கூறினேமே என விரைந்தார்; எதிரே பார்த்தார். பாவம்! எவனே ஒருவன் ரிக்ஷா வண்டியை இழுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தான்.

அவனைத்தான் நேற்று இரத்தச் சேமிப்புக் கிடங்கில் பார்த்ததை நினைவு படுத்திக் கொண்டார். மேலும், இவனின் இரத்தம் செல்வனுக்குப் பொருந்தியதாக டாக்டர் வேறு கூறினரே! இவனும்செல்வன் சாயலாக இருக்கிறனே, ஒருவேளை செல்வனின் அண்ணன்தானே?

நேற்று இரத்தம் கொடுத்துப் பணம் பெறும் அளவுக்கு அவனுக்கு என்ன இடர்ப்பாடோ? இன்றும் அவனின்

முகமே கன்றிபோய் உடலே குன்றியிருக்கிறதே சவாரி ஒன்றும் கிடைக்கவில்லையா ?

'....இந்தாப்பா....ரிக்ஷா....இங்கே.வா.' ஆதாரத்துடன் அழைத்தார். வந்தவன் எல்லப்பனே; வீடு நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

"....என்னப்பா, ஆஸ்பத்திரிக்கு வருகிறயா ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஒரு ரூபாய் நோட்டை எல்லப்பனிடம் கொடுத்து,

"மீதி தரவேண்டியதில்லை; நீயே வைத்துக்கொள்" என்றார்.

எல்லப்பன் தாயைக் காப்பாற்ற வேண்டிய தொகை சேர்ந்துவிட்டது என்ற மகிழ்வுடன், மொத்த பணத்தையும் தன் அரைக்கச்ச வேட்டியில் இறுக்கி முடிபோட்டான். எட்டி நடை போட்டும், சிறு ஓட்டம் எடுத்தும் வண்டியை இழுத்துக் கொண்டு சென்றான் எல்லப்பன்' அச்சாணி போன்ற அழகப்பரின் உடல் பாரத்தால் வண்டியின் அச்சாணியே கழன்றுவிடும்போல் இருந்தது.

அழகப்பர் தன் உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்த ஐயத்தை அரை மணி நேர மனப்போராட்டத்துக்குப் பிறகு கேட்டுவிட்டார். தன் பெயரையும், தன் தாயின் பெயரையும் கூறிச் சரிதானு என்று அவர் கேட்டதும் எல்லப்பன் திகைத்தான். மேலும் தெரிந்துகொண்டான் தன் தம்பியைப்பற்றி, தன் தாய் சந்தேகப்பட்ட செல்வனே எல்லப்பன் என்றறிந்துகொண்டான். பசி, இரத்தக் குறைவு, எதிர்பாராத சேதியாவும் அவனை ஒருங்கே தாக்கின; கண்கள் இருண்டன. காதுகள் பஞ்சடைத்துப் போயின.

வழியிலேயே அழகப்பரை ஆஸ்பத்திரியில் விடுகையில் தம்பியைப் பார்க்க வேண்டும் என்ற அவா அவன் உள்ளத்தை அலையச் செய்தது. டாக்டர் சுந்தரத்தின் வீடுவந்தால் இறங்கிக்கொள்கிறேன் என்ற அழகப்பரின் குரல் அவன் காதுக்கு எட்டவில்லை! எதிரே வரும் லாரிகள், வண்டிகள் யாவும் சுழன்றன. விதியை மீறிப் பாதையை விட்டு விலகினதால், பின்னல் தொடர்ந்த போலீஸ்காரனின் ஊதுகுழல் அவன் காதில் விழவே இல்லை? வழியை மறித்து வம்பு செய்ய வரும் ரிக்ஷாக்கார முதலாளியையும் அவனல் அறிந்துகொள்ள முடியவில்லை! அடுத்து என்ன நிகழ்ந்தது என்று அவனுக்குத் தெரிய நியாயமேயில்லை !!!

தன் முகத்தில் குளிர்ந்த நீர்பட்டது உணர்வு பெற்று விழித்துப்பார்த்தால் தான் நடைபாதையில் படுத்திருப்பதைத் தெரிந்துகொண்டான். தான் மயக்கமுற்றுப் பாதையில் வீழ்ந்ததையும் அந்தத் தனவந்தர்— தம்பி தன்னிடம் வளர்ந்து வருவதாகக் கூறிய அவர்—சொன்ன இடம் சென்றடையுமுன்னரே கூலி கொடுத்த தனவான்-சொற்ப காயங்களுடன் பக்கத்திலுள்ள டாக்டர் விடுதியில் சேர்க்கப்பட்டார் என்பதையும் அறிந்துகொண்டான். முதலாளி ரிக்ஷாவை வேறோர் ஆளுடன் இழுத்துச்சென்றதை அங்கிருந்த மற்றோர் ரிக்ஷாக்காரன் சொல்ல அறிந்தான். ரிக்ஷா பெட்டியிலிருந்து எடுத்து எறியப்பட்ட ரொட்டிகளை அவனே எல்லப்பனிடம் திருப்பிக் கொடுத்தான். நல்ல வேளை! தான் முயன்று பெற்ற பணம் ரிக்ஷாவிலேயே வைத்திருந்தால், அந்த ரிக்ஷாக்கார முதலாளி கட்டாயம் எடுத்துச் சென்றிருப்பார்.

விரைவிலேயே மருந்தை வாங்கிக் கொண்டு ரொட்டியுடனும், மருந்துடனும் தாயைக் காப்பாற்ற வழி கிடைத்தது என்ற மகிழ்ச்சியில்-தம்பியைப் பாராமல் போகிறமே என்ற மனத்தாங்கலுடன்-தாயைக் காப்பாற்றிப் பின்னரே தம்பியைச்சென்று பார்க்க வேண்டும் என்ற காதலுடன்-சோர்வு, தளர்ச்சி யாவையும் மறந்தே அவன், தன் உடம்பின் நிலைக்கு மீறியவேகத்துடன் நடக்க ஆரம்பித்தான்.

10

அழகப்பர் டாக்டர் சுந்தரத்தின் வைத்திய விடுதியில் படுத்திருந்தார். வீட்டின் முகப்பறையையே வைத்தியாலயமாக்கிக் கொண்டிருந்தார் சுந்தரம். சுந்தரம் அழகப்பரை அசையக்கூடாது என்று ஏற்கெனவே எச்சரித்திருந்தார், அவர் காயமுற்றிருந்த காரணத்தால். டாக்டரின் மகனிடமிருந்து, கல்லூரியில் படிக்கும் மாணவன்--அவனிடமிருந்து, ஆங்கில

எழுத்துலகச் சிற்பிகளுள் ஒருவரான கோல்டுசுமித்து எழுதிய

'The citizen of the world'

என்ற புத்தகத்தையே இப்போதுவாங்கி வெறுமனே படித்துக்கொண்டிருந்தார்.

"…. பிள்ளை, ஆள் அனுப்பிவைக்கிறேன். செல்வன் உடம்பு நிலை பற்றி அறிந்துவர. நீங்கள் அமைதியாயிருங்கள்.

"……டாக்டர், செல்வனை நான் இப்போது பார்க்க முடியாது என்கிறீர்கள்.'' அழகப்பன் ஏக்கத்தோடு கூறிவிட்டு, பக்கங்களைப் புரட்ட ஆரம்பித்தார்,

"….ஆமாம் …. டாக்டர், உங்கள் மகன் என்னபடித்துக்கொண்டிருக்கிறான் ?

"….அவன் நாளைக்கு 'சீசர்' என்ற ரோமாபுரி மன்னனைப்பற்றி கல்லூரி 'டிபேட்டில்' பேசப்போகிறான். அதற்காகச் சில குறள்களைக் குறித்துக்கொண்டு. பேச்சுத் தயாரித்துக்கொண்டிருக்கிறான்….'' சுந்தரம் எழுந்து சென்றுவிட்டார்.

அழகப்பர் நடந்த விபத்தை எண்ணிப் பார்த்தார். எல்லப்பன் ரிக்ஷாவை நழுவ விட்டதைத்தான் கண்டார். அடுத்து சுந்தரம் தன் பக்கலில் அமர்ந்து வைத்தியம் பார்ப்பதைத்தான் உணர்ந்தார்; விபரம் அறிந்தார். எவ்வளவு நேரம் தான் சிந்தனையிலும், படிப்பதிலும் கழித்தாரோ! அவர் பார்வை உந்தப்பட்டு,

A City 'night-piece'

என்ற கட்டுரையின் இறுதியில் உள்ள ஓர் சில வரிகளில் பதிந்தன. வாயைவிட்டே உரக்கப் படித்துப் பார்த்துக் கொண்டார்.

> 'The slightest misfortunes of the great, the most imaginary uneasiness of the rich are aggravated with all the power of eloquence and held up to engage our attention and sympathetic sorrow. The poor weep unheeded persecuted by every subordinate species of tyranny; and every law which gives other security, becomes an enemy to them……;'

"ஆம் எவ்வளவு உண்மையானவை ஏழைகளின் வாழ்வில். முன்னேற்றத்தில் ஏன் எதிலுமே எவ்வளவு தடைகள் இடுக்கண்கள்! வெளித்தோற்றத்திற்கே மதிப்பு; மதிப்புடைய இடத்தை வாழ்வில் பெறாத அவர்கள் அதோகதியோ! சட்டமே, சமுக விரோதியாகவன்றோ உள்ளது.

அவர் நினைவு எல்லப்பனைப்பற்றி ஓடியது. பாவம்! அவன் மயக்கமுற்று வீழும் அளவுக்குப் பட்டினி. அவனை யாரும் கவனிக்கவில்லை. செல்வந்தன் என்பதால், தன்னை அக்கரைப்பட்டு வைத்திய விடுதியில் சேர்த்தனரே!

'இல்லாரை எல்லாரும் எள்ளுவர்;
செல்வரை எல்லாம் செய்வர் சிறப்பு'

என்றகுறளும்இஃதன்றோ உரைகின்றது உண்மையான உலகியல்பு அழகப்பர் தம்மையே நொந்து கொண்டார். இரக்கப் பட்டால்தான் என்ன? ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு வருவது அவன் வண்டியில் நாம் ஏன் ஏறினோம் ?

'பயன் கருதாது எச்செயலுமே இல்லை என வள்ளுவர்கூடக் கூறிவிட்டு அல்லவா அச்செயல் இருந்தால் அதன் பயனைப் பின்னர் கூறுகின்றார்.

இடையே டாக்டரின் மகன் பக்கத் தறையில் உரத்து குரலைப் படிக்கக் கேட்டார். மீண்டும், அவர் நினைத் தார்' பல நல்லறிவு நூல்களைப் பயின்றுமா, நான் அவ்வாறு சுயநலமாக நடந்துக்கொண்டேன் ?

டாக்டர் மகன் ஒப்புவித்த குறளைக் கேட்டார்.

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்
றுந்தன் உண்மையறிவே மிகும்'-

'ஊழ் என்ற தனியதிகாரத்தில் உள்ள இக்குறளை உன்னினர் அழகப்பர். மாந்தர் தம் மனத்தின் வலியின்மையை எவ்வளவு தெளிவாகக் கூறிவிட்டார்! நாம் கொடுத்தாலும் எல்லப்பன்தான் பெற்றுக் கொள்வானா? தீய வழிகளில் எளியதாகப் பணம் குவிக்கும் இக்காலத்தில் அவன் அவ்வழிகளில் முயலாது, இரத்தம் கொடுத்தல்லவா பணம் பெற்றான்; மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டார்.

செல்வன் நன்கு தேறவேண்டுமே என விழைந்தது அவர் உள்ளம். ஆனல்-

எல்லாமே எண்ணியபடி நடந்து விட்டால் அப்புறம் ஏன் மனவியாகூலம்? எல்லாமே அனுகூலமாக அல்லவா ஆகி விடும்! அனுப்பின ஆள் வந்தான் அவன் அறிவித்ததோ!

அன்று காலேதாம் ஆஸ்பத்திரியில் எட்டு மணி சுமாருக்குச் செல்வன் உயிர் நீத்தானும். எவ்வளவு முயற்சிகள்! அவ்வளவையும் கடந்து அல்லவா அவன் உயிர் போய்விட்டது.

அழகப்பர் 'செல்வா' என்று அரற்றிய படிவெளியே பாய்ந்தோடினர். சுந்தரம் திகைத்துச் சிலேயானர்.

அவரின் மகன் தான் தயாரித்த பேச்சினின்று ஓர் பகுதியை படித்துக்கொண்டிருந்தான். அதே ஊழ் அதிகாரத்தில் மற்ருேர் குறளேப் படித்தான்.

'ஊழிற் பெருவலி யாவுள; மற்றென்று சூழினுந்தான் முந்துறும் என்பது குறள். சீசர், தன் உயிருக்கு நேரவிருக்கும் ஆபத்தை அறிய வாய்ப்பிருந்தும், அறியாஇயினன் ஊழ் ஊன்றிநின்று அவன் உயிரைப் போக்கடித்தது,

சுந்தரத்தின் மனம் செல்வனேப்பற்றி ஒப்பு நோக்கியவாறு; அழகப்பரைப்பின் தொடர்ந்து விரைந்தார்.

11

எல்லப்பன் எட்டி நடை போட்டான். அவன் கண்கள் இருண்டன· கீழே சோர்ந்து நினைவு தப்பி விழ இருந்தான். காணுமிடமெங்கும் கனத்த இருள் போர்வை போர்த்ததுபோல் அவன் பார்த்தான். இருநாட்கள் உணவின்றியும், இரத்தம் வேறு குறைந்தும் வாடி வலியிழந்து மெலிந்துவிட்டான். தாயைப் பற்றிய நினைவே அவனேத் தூண்டிற்று.

அதோ! இன்னும் கொஞ்ச தூரமே., வீடு நெருங்க நெருங்கத் தாய் பிழைப்பாள் என்ற நம்பிக்கை அவனுக்கு வலுத்தது.

அந்தோ! அவனல் இப்பொழுது நடக்கவும் முடியவில்லே. தாயின் ஞாபகம் அவனே உந்தியது. கைகளினல் மருந்து புட்டியையும் ரொட்டியையும் இறுகப்பற்றிக்கொண்டு தட்டுத் தடுமாறி வீட்டு வாயிற்படியை அடைந்தே விட்டான்.

அய்யோ! அவனல் அதற்குமேல் நடக்கமுடியவில்லே. சுருண்டு வீட்டினுள்ளேவிழுந்தான்.

அய்யகோ! அவன் கையிலிருந்த மருந்து புட்டி தரையில் மோதி இரண்டாக உடைந்தது. அந்த உடைந்த புட்டியிலிருந்து யாருக்காக அவன் தன் இரத்தத்தையும் தியாகம் செய்து வைத்தியம் பார்க்க முயன்ருனே, அந்தத் தாயின் சில்லிட்டு, விரைத்துப்போன பிரேதத்தை மருந்து நனேத்துக்கொண்டு ஓடியது. அடுப்பின் இடுக்கில் பதுங்கியிருந்த பூனேயும், தெரு நாய் ஒன்றும் எல்லப்பன் கையினின்று நழுவிய ரொட்டித் துண்டுகளேப் பங்கு போட்டுக் கொள்ள தெருவின் சாக்கடையோரம் ஓடின. எல்லப்பன், தாய் சலனமின்றி அமைதியாக இருப்பதைப் பார்த்தான்- நீண்ட துயிலில்-இறப்பில் அமைதியாக இருக்கின்ருள் என்று தெரிந்துகொண்டான்; அலறினன்; கதறினன்; கண்ணீர் பெருக்கினன்; புலம்பினன்; பலவாறு சொல்லி விம்மினன்.

"........அய்யோ! அம்மா........ நீ போயே போய்விட்டாயா....இங்கே நோயின் உபாதையில்லாமல் அமைதியாயிருக்கிருயே.... அம்'மா நீ அடைந்த அந்த அமைதியை· நானும் அடைவேன். தம்பியைப் பற்றி அறிந்ததோடு சரி....செல்வா....! நல்லப்பா....! அய்யோ! அவனேக் காணுமலே போகிறேன்....அம்'மா. நீ இருக்கும் இந்த அமைதியில் நானும் இருப்—"

திருமணம் நடந்த வீட்டினின்று-ஒலி பரப்பியிலிருந்து ஏதோ ஓர் படத்தில் எவனே ஒரு காதலன், காதலியைஇழந்து அல்லல்பட்டு, இறப்பில் அமைதியைக் காண்கின்ற போழுது கதறிய சோக கீதம், மெதுவாக உயிர் நீங்கிக் கொண்டிருந்த எல்லப்பன் செவியில் விழுந்தது.

'.... அமைதியுறுகிறேன் அன்பே--
மீளாத் துயிலில் அமைதி அடைவேன்

அன்பே--உனையெங்கே காண்பேன்
ஆருயிரே.......

எல்லப்பன் உண்மையான உலகியலை உணர்ந்தான். ஆதாயம், ஆதரவு யாவும் நீங்கிய-நேரிய முறையில் வாழ வேண்டும் என்ற எண்ணமே உடைய ஏழைகள் இறப்பிலேதான் அமைதியைக் காண்கின்றனர்.

அவன் சடலம் விட்டு ஆவிபிரிந்து போயிற்று. தெருவில் எங்கோ ஓர் நாய்மண்டை வீங்க ஓலமிட்டுஅழுது கொண்டே ஓடியது.

12

செல்வனை அடக்கம் செய்துவிட்டு அவன் சமாதி முன்பு நின்று கொண்டிருந்தார் அழகப்பர். மௌன அஞ்சலி செய்தார். அடுத்து அடுத்து வந்த துன்பம் அவரை தளர்ச்சியடையச் செய்து விட்டது.

வெளியே அமைதி-அவர் உள்ளம்;
குமுறும் எரிமலை!

ஏராளமான செல்வம் - நிலபுலன்கள் பல வீடுகள். எல்லாவற்றையும் அனுபவிக்க அவர் ஊட்டி வளர்த்த செல்வன் இல்லை. இந்த உலகை விட்டே சென்று விட்டானே.

புறத்தே அமைதி-அவர் அகத்தே:
கொந்தளிக்கும் கடல்!

செல்வன் ஏழைகள் வாழ்வில் அக்கரை கொண்டான்-அவர்கள்பால் அன்பு பூண்டான். அந்த அன்பும் அவனுடன் மாய்ந்துவிட்டதா?

எங்கும் அமைதி-அவர் மனமோ:
அலைக்கப்படும் படகு!
கண்விழித்தார்; பார்த்தார்.

செல்வனின் இலட்சியம் இன்னும் மாயவில்லை. ஏழைகளிடம் கொண்ட அன்பு இன்னும் இருக்கிறது. சமாதியின் மீது வைக்கப்பட்ட அகல் விளக்கு இன்னும் துல்லிய ஒளிவீசி எரிந்துகொண்டிருக்கிறது.

அவ்வொளி அணையுமுன்னர் செல்வனின் இலட்சியத்திற்காக தம் சொத்து முழுமையும் பயன் படுத்த எண்ணினர் ஆதரவில்லாத, அனாதையான, அபயக் குரல் இடுப...வர்கட்கு செலவிட உன்னினர். பல ஏழை விடுதிகள் பலவற்றைத் திட்டம் போட்டார். செல்வன் மனம் அப்போது அமைதியுறும், ஏழைகட்கு தொண்டு என்ற நினைப்பே அவனுக்கு அலாதியான மகிழ்வையும், அமைதியையும் தந்தது. 'தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்' என வள்ளுவரே இன்பம் எங்கே என காட்டிவிட்டாரே! அதனைப் பிறரும் அறியாரோ!

செல்வனில்லாக் குறையை, அவன் இலட்சியங்களை நிறைவு செய்து, தம் மனக் குறையை ஆற்றலாம்-இன்பம்பெறலாம்-அமைதி வாழ்வு நடத்தலாம் என எண்ணினர்.

அவர் உள்ளம் அமைதியடைந்தது. புறத்தே இருப்பதோ வெறும் மயான அமைதி!

"....செல்வா, உன் லட்சியங்களைச் செயலாற்றுவதே என் இலட்சியம். நீ இன்னும் இருக்கிறாய் செல்வா....ஏழைகளின் நெஞ்சிலெல்லாம் நிறைந்திருக்கிறாய்....இதோ, என் பின்னால் இருக்கும் குழாம், நீ பிரிந்தமைக்காக துயரப்படுகின்றனர்....ஏழைகளுக்குப் பணி செய்வேன். செல்வா....உன்னையும் அவர்களிடை காணப் பெறுவேன்....அந்த மாதிரி பணிகளில்தாம்-தொண்டுகளில் தாம் என் போன்ற செல்வருக்கு வேண்டும் அமைதி இருக்கிறது.....

இந்த உறுதிமொழிக்கேகாத்திருந்தாற் போன்று சமாதி விளக்கும் முதலில் அமைதியாகக் கொழுந்தெரிந்து பின்னர் 'பட்டென்று' அணைந்தது.

அணைந்த திரியினின்று எழுந்த கரும் புகை விண்ணேக்கிச் சென்றது. அதனூடே 'அன்பின் வழியது உயிர் நிலையே போன்று' செல்வனின் உருவம் செல்வதை அழகப்பர் கண்டாரோ?

‘வஞ்சம்’

by

V. பாலசுப்ரமணியம் 2nd U. C. Ist Group

அங்கம்: 1

காட்சி 1 இடம்: வாயிலைப் பார்த்த படி ஓர் வீட்டின் அறை.

உறுப்பினர்கள்: அலமேலு, கோமளம், சுகுமாரன் ஓர் நொண்டிப் பிச்சைக்காரன் (திவாகரம் பிள்ளை)

அமைப்பு: அலமேலு படுக்கையில்படுத்தபடி இருக்கிறாள். அவள் பெண் கோமளத்துடன் பேசிக்கொண்டிருக்கிறாள்.

அல:- ஊம்....ஐயோ....அம்மா....! கோமளம்....உம் இந்தப் பாழாப்போன ஷயம் இப்படி உயிரை வாங்குதே.... ஐயோ....எங்கேம்மா....மோகன்....

கோ:- காலையிலே போனவன் தாம்மா.... இன்னும் வரவில்லை. வேலை கிடைக்குமான்னு அண்ணு தேடியலைவதை பார்த்தால், எனக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கலேம்மா....

அல:. இல்லாவிட்டால் நீயும் அவனோடு வேலை தேடுவாயா?....என்னவோ, நீயோ பருவப்பெண். காலா காலத்தில் உனக்கும் கல்யாணம் செய்து பார்த்து, மகிழனும்'னு இந்த பாவியால் அதைப் பார்க்க முடியாது போல் இருக்கிறது....எல்லாம்பழைய வினையால் வந்த விளைவுதான்....

கோ:- என்னம்மா அது? நாம் என்ன தீங்கம்மா செய்தோம்....

அல:- என்னத்தைச் சொல்றது....அது பழங்கதை....யாரோ ஓர் நண்பர் செய்த உபகாரத்தாலேதான் உங்க அப்பா நல்ல நிலைக்கு அப்போது வந்தார்....அந்த நண்பர் என்னமோ நல்லதுதாம் நமக்கு செய்தார். ஆனு குதிரைப் பந்தயம் போன்ற பல பைத்தியம் அவருக்கு உண்டு. இப்படிதான், ஏதோ ஓர் பந்தயத்திலே எல்லாத்தையும் இழந்துட்டு உங்கப் பாவை பணம் கேட்டாரு....உங்க அப்பாவின் நாக்கில் எந்த சனி புகுந்ததோ, தெரியலே. கோபமாகப் பேசி, வரம்பில்லாமல்வார்த்தைகளை கொட்டிவிட்டார்; பணமும் கொடுக்கவில்லை அப்போதிருந்து இரு குடும்பத்து அன்னியோன்னியத்தில் பெரும் பிளவு உண்டாகிவிட்டது. நன்றி மறந்து நம்பினவங்களை வஞ்சித்த பாதகம் பழியாக தொடர ஆரம்பித்தது. பாழாய்ப்போன வெள்ளம் வந்தது. போட்டதுபோட்டபடியே எல்லாவற்றையும் விட்டு, உன் அப்பா, மோகன், நீ, நான் எல்லோரும் ரயிலில் ஏறிவிட்டோம். எங்கு போனல்தான் என்ன? நிழல் போலத் தொடர்ந்த அந்த பழி விடுமா? இந்த இருபதாம் நூற்றாண்டிலே எதைத்தான் சதம் என்று கூறமுடியும்? ரயில் கவிழ்ந்தது. அந்தக் கலவரத்தில் உங்க அப்பா எங்கேயோ பிரியும்படியா ஆயிடுத்து பத்து வருஷங்கள் போனதே! தெரியவில்லை. இப்பவே, இன்னிக்கோ, நாளைக்கோ என்று என் கட்டைஇழுத்துண்டுகிடக்கு....மோகனுக்குவேலை கிடைக்கணுமே, உனக்கும் கல்யாணமாகிவிட்டால் எனக்குக் கவலையே கிடையாது. பாவம்; உங்கள் அப்பா எங்கே இருக்கிறாரோ? என்ன செய்கிறாரோ?

கோ:- ஏம்மா? அப்பா எப்படியம்மா இருப்பாரு....நான் அவரைப் பார்த்ததே கிடையாது போல, அவர் முகமே எனக்கு மறந்துவிட்டதே....

(நொண்டிப் பிச்சைக்காரன் வாயிற்படியில் வந்து)

பிச்:- அம்மா....தாயே....பசிக்குது ஏதேனும் போடம்மா....

கோ:- ஒன்றுமில்லையப்பா ... பக்க வீடுகளில் கேட்டு பாரப்பா....

பிச்:- ஒன்று....மில் லையா.... (யோசிக்கிறான்)

குரல்:- ஆ! இந்தப் பெண் என் பெண்ணைப்போலவே இருக்கிறதே....அவளே தானா? அல்லது வேறு யாரா?

மற்றொரு குரல்:- 'அவளாவது, இருப்பதாவது....ஹா...ஹா (சிரிப்பு) பிரிந்தவர்களையே ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அலைகிறாயே.... அவர்களைப் போல் தென்படுவார்கள் பார்ப்போர்கள். வீண் சபலம்!

(சுகுமாரன் வருகிறான்)

சுகு:- கோமளம்....கோமளம்

கோ:- ஓ! நீங்களா....வந்து விட்டீர்களா உம்....வந்து....என்ன விஷயம்....

சுகு:- உன் தாய்க்கு இப்போது எப்படி இருக்கிறது.

கோ:- அப்படியேதான் மயக்கமாக இருக்கிறாள்,...

சுகு:- பாவம்! டாக்டர்கூட இனிப் பிரயோசனம் இல்லை என்று சொல்லி விட்டாரே. மனதுக்கு அதிர்ச்சியாக எவையும் ஏற்காது என்று வேறு சொல்லியிருக்கிறார்.... ஆமாம்! உன் அண்ணன் மோகன் எங்கே?

கோ:- சுகுமார். வேலை தேடிக்கொண்டு காலையில் போனவன்தான். இன்னும் வரவில்லை இந்த கஷ்டங்களை பார்த்துக்கொண்டு உயிரோடு இருக்கவே நான் விரும்பவில்லை சுகுமார். உங்கள் நினைவே என்னை வாழச் செய்கிறது.

சுகு:- கோமளம்! என் அப்பாவை வலுக்கட்டாயப்படுத்தி ஓர் குமஸ்தாவை வைத்துக்கொள்ள யோசனை சொல்லியிருக்கிறேன். அவரும் இசைந்தார். இப்போது உன் அண்ணனை அவரிடம் அனுப்புமாறு சொல்லவே இங்கு வந்தேன். நானே உன் அண்ணனைப் பார்த்ததுகிடையாதே .. சரி ... நான் வருகிறேன் கோமளம்.

(பிச்சைக்காரனைப் பார்த்து)

.. ஏனய்யா, அப்படி பார்க்கிறேசரி, அப்பாலே போ... நான் வருகிறேன். கோமளம்...

கோ:- ஜாக்கிரதையாப் போங்கள் சுகுமார்...வழியிலே ஒரு பாழுங்கிணறு இருக்கிறது. பத்திரமாகப் பார்த்து போங்கள்...

(சுகுமார் போகிறான்-கோமளம் உள்ளே போகிறாள்)

(பிச்சைக்காரன் திகைத்து நினைக்கிறான்)

பிச்:- ...இதென்ன இது. இடிக்கு மேல் இடியாக இவன் சம்பந்தம் பிள்ளை மகன் அல்லவா. இவன் அப்பனையல்லவா நாம் துச்சமாகப் பேசி துரோகம் செய்துவிட்டோம். சம்பந்தம் இங்குதான் அப்போ இருக்கிறானே? (போகிறான்)

கோ:- அம்மா, என்ன இது. இப்படி வெறித்துப் பார்க்கிறாயே.

அல:- இல்லை, கோமளம். இப்ப கொஞ்ச நாழிக்கு முன்னாலே உங்கப்பாவை வாயிற்படியில் பார்த்தேன்.

கோ:- (சிரித்து)...சே!...சே...! வீண் பிரமையாக இருக்கும். மயக்கத்தில்கூட அப்பாவைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருந்திருப்பே..அதே நினைப்பு கனவா மாறியிருக்கும்... மனதை அலட்டிக்காம படுத்துக் கொள்ளம்மா அண்ணா வந்ததும் எழுப்பறேன்.

--திரை--

அங்கம் 1

காட்சி: 2 இடம்: வீதி

உறுப்பினர்: மோகன்:
இருவழிப்போக்கர்கள்: தணிகாசலம், அருணாசலம்.
நொண்டிப் பிச்சைக்காரன்
(திவாகரம் பிள்ளை)

[மோகன் வருகிறான்]

மோ:- இனி என்னத்தான் செய்யறது...

வேலையே கிடைக்கவில்லையே. ஐயோ யாரைப் போய் நொந்துகொள் வது ...

[அங்கே இருந்த இருக்கையில் அமரு கிறான்]

......யாரைப் போய்த்தான் இனி வேலை கேட்பது ?

[தணிகாசலம்-அருணாசலம்-பிச்சைக் காரன் வருகின்றனர்.]

தணி:- ஏய்......ஒண்ணும் இல்லேன்னு கேக்க மாட்டே. போ. போடா...

அருணா:- எம்பா எதுக்காகப்பா நீங்க ளெல்லாம் இப்படி வந்து உயிரை எடுக்கறீங்க...வழியை மறிக்கிற வம்பர்களாயில்ல இருக்கு ...... இத, பாருப்பா, பத்திரமா எங்காவது போய் பவித்திரமா ஒளிஞ்சுக்க...

பிச்:- என்னுங்க....அப்படிச் சொல் விட்டா பின்னே எப்படிங்க....

அருணா:- பின்னே என்னவாம்....இன் னிக்கு நான் வர்றப்போ, போலீஸ் காரங்க மூணு, நாலு பிச்சைக் காரர்களை லாரியிலே போட்டுக்கிணு போனுங்களே....—

தனி:- எதுக்கு....லாரியிலேயா .... அவங்க என்ன குற்றம் செய்தாங்களோ ?

அருணா:- ஹூம் .... ஒரு குற்றமும் செய் யலே....இன்னும் ரெண்டு நாள்ளே அரேபியா ராஜா வர்ராரில்லே,....

தணி:- ஆமாம்....! அதற்கும் இவங்களுக் கும் என்ன வந்தது ?

அருணா:- இப்படி பிச்சைங்காரங்க தெரு விலே அலையறதைப்பார்த்தா அவரு நம்ம நாட்டைப்பத்தி கேவலமா இளப்பமா நினேச்சிப்பாராம்....

பிச்:- அதுக்காக, எங்களை ஜெயில்லே அடைச்சு, மறைக்கப் பார்க்கிறாங் களா ?

தணி:- சரிதான்....இந்த மாதிரி நாலு பிச்சைக்காரப் பசங்க இருந்தாத் தான் ஏற்றத் தாழ்வு நன்னுத் தெரி யும். ஆண்டியே இல்லாத நாட்டிலே அரசன் ஒருத்தன் இருக்கான்ற வேறுபாடு பின்னே எப்படி தெரி யப்போவது.... இல்லே அருணசலம்.

அருணா:- அட, என்னய்யா நீர்....அரசன் எல்லாம் இப்போ ஏது ? எல்லாம் அமைச்சராட்சிதானே.... உம்....பிச் சைக்காரப் பசங்களெல்லாம் அமைச்சரா வந்து, எல்லாரையும் பிச்சைக்காரன்னே நினேச்சிண்டு டருன்....ஆனு, அதே அமைச்சருங்க பிச்சைக்காரங்களாகவும் ஆகிட ருங்க....இது தெரியல்லே, தணிகா சலம்....

[தணிகாசலம் முகம் கடுப்பாகிறது; அரு ணசலம் சிரிக்கிறன்]

பிச்:- அப்போ, அவங்களேக்கூட கேவ லம்'னு நினேச்சி கௌரத்துக்காக அவங்களையும் கொண்டு போயி ஜெயில்லே மறைப்பாங்க இல்லே....

தணி:- டேய் .... எட்டி நில்லுடா .... எங்க கூடப் பேச உனக்கு என்ன தகுதி இருக்கு....

அருணா:- என்ன தணிகாசலம், ஏன் இல்லாமே; நீயும் ஒரு காலத்துலே அமைச்சராயிருந்து இப்போ இவ னுக்குச் சமமாயில்ல வந்துட்டே.... ஏம்பா கோவப்படறே உள்ளதைச் சொன்னு....

தணி:- சரிதான் விட்டுத்தள்ளு என்ன என்ன அமைச்சர் பதவி அட ? .... ஹூம்' இப்பக்கூட நாலஞ்சு பேர் ஒத்த காலல இல்லே. இந்த நொண் டிப் பயமாதிரி நிக்ருங்க, அந்தப் பதவிக்கு வர்ர தேர்தல்லே...

அருணா:- ஏன்? நீயும் வேண்டுமானு மீண் டும் ஒருமுறை நில்லேன்...

தணி:- நிக்கலாம்தான் ...... முன்னே அமைச்சராயிருந்து சேர்த்த பணம் போயிட்டுது... பாப்பராயிட்டேனே. அதனுல்தான் இன்னொரு முறை நிக்கலாமான்னு பார்க்கிறேன்... ஆனு அதுக்குக் கூடப் பணம் வேணுமே...

அருணா:- அப்போ, என்ன செய்யப் போறே......

தணி:- அதுக்குத்தான்,சம்பந்தப்பிள்ளை கிட்டபோய் யோசனை கேக்கலாம்னு

பார்க்கிறேன்...

பிச்:- சம்பந்தமா—?

தணி:- அட. யார்ரு இவன் ...... என் பொண்ணேகூட சம்பந்தத்தின் மகன் சுகுமாருக்குக் கொடுக்க, அவுன்கூட சம்பந்தம் செய்துக்கப் போறேனே... எல்லாம் ஸெட்டில் ஆயிடுத்து...

அருணு:- ஆமாம்... இப்ப சம்பந்தத் துக்கு குமாஸ்தா வேண்டுமாமே.

மோ:- எந்த சம்பந்தங்க? அவர் எங்கே யிருக்காருங்க?

அருணு:- அட இது என்ன? புது சம்பந் தமாயிருக்கே... நீயே சொல்லப்பா.

தணி:- அதாம்பா ... இப்படியே நெடுக போய்... போயி ... அந்த யாரையா வது கேட்டுப்பாரு சொல்லுவாங்க..

மோ:- தேங்ஸ்'ங்க......

(போகிருன்)

அருணு:- பையன் வேலைக்காக அலைய ருன்போல இருக்கு...

தணி:- பெண்ணைப் பெத்தவன் எப்படி பிள்ளை தேடிண்டு அலையருனே, பட்டம் பெற்றவன், படித்தவன் வேலையைத் தேடிண்டு அலையருன். சரி வா... நாமும் சம்பந்தங்கிட்டே போவோம்...

அருணு:- அட, இதுக்குள்ள என்ன அப்பா அவசரம்? வா... அப்புறமா போவோம்... அங்கே போனு மனு சன் குறள் புத்தகத்தை எடுத்து வைச்சுக்கிணு, நம்ப கொரளேயைப் பிடித்து உலுக்குவான் ... வா... வா..

[இருவரும் வந்த வழியே திரும்புகின் றனர்]

பிச்சை:- சம்பந்தம்...நீ இங்கேயா இருக் கிறே... என்னே இந்த நிலையில் நீ பார்த்தால்... ஐயோ...என்ன கேவல மாக அவன் என்னைப்பற்றி எண் ணுவான்...அந்தப் பிள்ளை யாரோ] தெரியலையே... நம் மகன் மோகனைப் போலவே இருக்கிருனே... இன்று நான் பார்க்கின்ற முகமெல்லாம் என் பழைய நினைப்பை எழுப்பு கிறது... சம்பந்தத்திடம் போவோம். என்னைத் தெரிந்துகொள்வானே, இல்லையோ எதற்கும் போகிறேன்...

[போகிருன்.]

—திரை—

அங்கம் 1

காட்சி: 3 இடம்: சம்பந்தம் பிள்ளை வீடு

உறுப்பினர்கள் சம்பந்தம் பிள்ளை, வேலைக் காரன் முனுசாமி, மோகன் சுகுமாரன், காரியதரிசி ஏகாம்பரனர், சமையல் காரன் நமசிவாயம் ..

சம்:- டேய்...முனி... எங்கேடா... அந்தப் புத்தகம்...

முனு:- எதுங்க ... திருக்குறளுங்களா...

சம்:- ஆமா...ஆமா...அதுதான்...என்னே இந்தப் பந்தயம் போன்ற சூதாட் டங்கள்ளேயிருந்து காப்பாத்தினரே வள்ளுவர் ...

முனு:- உங்களுக்கு அவர்தானுங்களே கடவுள் மாதிரி...உம்...இதோபோயி கொண்டு வர்ரேங்க...ஆனு, வந்து... வெளியே வந்து...

சம்:- என்னடா அது....நமச்சிவாயம் வந் துட்டானு....?

முனு:- ஒரு 'லேடுங்க'....உங்களேப்பேட்டி பார்க்கணுமாம்....இண்டர் வியூவுக்கு வந்திருக்கிருர் ....

சம்:- அப்படியா....ஆமா இந்த இங்கிலீஸ் பதங்களேயெல்லாம் எப்படி கத்துக் கினே.

முனு:- எப்படி உங்ககூடவே இருந்துகுற ளெல்லாம் நெட்டுரு செய்தேனே, அப்படியே தாங்க, சின்னய்யா வேலை கிடைக்குமான்னு போயி திரும்பிவர்றப்போதெரிஞ்சிக்கினே. இன்னும் எவ்வளவோ தெரியுமுங்க.

சம்:- சரி....வெளியே வந்திருப்பது பைய னில்ல சொன்னே....வேலைக்காகத் தான் வந்திருப்பான்....

முனு:- அதுலே சந்தேகமென்ன? படிக் காம இருந்தா வேலையே தேடவேண் டாமே? படிச்சவங்க வேலை தேட ருங்க படிச்சவங்க மேலும், படிக்

காதவங்களேயே பார்த்து, நீங்க என்னே வச்சுகின மாதிரி வச்சுக்க ருங்க.

சம்:- டேய்...போதுண்டா உன் சண்ட மாருத உண்மை....

முனு:- இதோ போயி அழைச்சிக்கினு வர்றேங்க.... (போகிருன்)

சம்:- உம்....படிச்ச பையன் எங்கிட்ட வேலே கேக்க வர்ருன் (சிரித்து) இத்தனேக்கும் நான் பள்ளிக்கூடமே ஏறி படித்ததில்லேயே ..ஆமாம், அந்தப் பையன் வந்தால் நான் எப்படி நடந்து கொள்கிறது? நான் என்ன செய்யணும்?

முனு:- (மோகன் பின் தொடர) கொல்லப்பட்டறையிலே ஈக்கு என்னடா வேலே...

சம்:-அடேய்...என்னடா இது...

முனு:- உம் ஒண்ணுமில்லீங்க...

மோ:- வணக்கங்க...

சம்:- ஆ, ஆ... வணக்கம் இப்படிஉட்கார் தம்பி என்னடா முனி...?

முனு:- இல்லீங்க... இந்த ஐயா கிட்டயிருந்து யாரோ ஒரு நொண்டிங்க—பிச்சைக்காரன் பேணு வாங்கிண்டு இதோ கொஞ்ச நேரத்திலே எழுதிட்டுத் தரேன்னுன்.. இவரு கொடுத்துட்டாருங்க பிச்சைக்காரப் பயஆக்கு பேணு என்னத்துக்குன்னு கேக்கறேங்க...

சம்:- ஏன் தம்பி ? பேணுவையா கொடுத்தாய் அடடே, அந்த எமகாகதப் பசங்க...

முனு:- அபேஸ் பண்ணிண்டு போயிடு வாங்களே...

மோ:- அப்படி இல்லே ஐயா ஏதோ சகாயம்'னு நிணேச்சி...

சம்:- கொடுக்கலாம் ஆனு அது அபாயமாச்சே

முனு:- பெரிய உபாயத்தோட இல்லே கேட்டிருக்கிறன் அவன்

சம்:- டேய் ! முதல்லே போய் நமசிவாயத்தை, வெங்காயம் வாங்கிண்டு வரச்சொல்லு...போடா போ

முனு:- ஆமாங்க! பெருங்காயம்கூட ஆயிடுச்சீங்க அதையும் அந்தப் பயகிட்ட சொல்லணும் (போகிருன்)

சம்:- (சிரித்து) நீ வந்த காரியம் என்னப்பா...

[மோகனும் சிரிக்கிருன்]

...ஆமாம்! எதுவரைக்கும் படிச்சிருக்கிறே...

மோ:- ஸ்கூல் பைனல் வரை சார்...எங்கெங்கோ வேலே தேடி அலேஞ்சுட்டேன்... ஓட்டல் சர்வர் வேலேக்குக் கூட இப்போ டிமாண்டா ஆயிடுத்துங்க...

சம்:- ஏன் இருக்காது... படிக்காதவங்க ஓட்டல் துவக்க. உன்னேப்போல, எத்தனே படிச்ச பிள்ளேங்க அந்த வேலேக்குக்கூட 'அப்ளிகேஷன்' போட்டு கியூவிலே நிக்கறுங்க...உம், ஏதாவது குழந்தை குட்டியோட கஷ்டப்படறியோ?

மோ:-அதெல்லாம் இல்லே...ஐயா...வயது வந்த ஒரு தங்கை... ஒரேயடியா காசநோயால் அல்லல்படும் என் தாய்...

(கண்களேத் துடைத்துக்கொள்ளுகிருன்)

சம்:- பாவம்! உம்... உங்கப்பா பேரு என்ன? என்ன பண்றுரு,

மோ:- இப்போது எங்கப்பா இல்லே...... ஐயா அவர் எங்களேப் பிரிஞ்சி. போயி பத்து வருஷங்கள் ஆகின்றன... அவர் பேர்கூட திவாகரம் பிள்ளே'ன்னு...

சம்:- என்னது... என்னது... திவாகரம் பிள்ளே (பல்லேக் கடிக்கிருர்)

மோ:- (பயந்து எழுந்துவிடுகிருன்) ஆ... மா...க...

சம்:- எந்த திவாகரன்? கொல்லும்பட்டி திவாகரம்பிள்ளேதானே...

மோ:- ஆமாங்க...

சம்:- உம் பேரு என்ன...அந்த துரோகியின் பிள்ளேஇல்ல நீ...

மோ :-கொஞ்சம் நிதானமா பேசுங்க... என் பெயர் மோகன்,

[சுகுமார் வருகிறான். திகைத்துநிற்கிறான்]

சம்:- மோகன்…உம்…அந்தத் துரோகியின் பிள்ளை பேர்கூட அதேதான். (எழுந்து நின்று) உன் தங்கை பேர் கோமளம்தானே? உன் தாய் பெயர் அலமுதானே…அப்படித்தானே.

[கைத்தடியால் தரையை உந்தி தட்டுகிறார். சுகுமாரன் மேலும் திடுக்கிடுகிறான்]

மோ:- ஆ…ஆ…மாங்க…உங்களுக்கு எப்படித் தெரியும்…

சம்:- எப்படித் தெரியுமாவது ஹா…ஹா என் வாழ்நாளில் அந்தத் துரோகியையா மறப்பேன்…

(சுகுமாரன் தலையைப் பிடித்துக்கொள்கிறான்)

மோ:- ஐயா .. ஐயா… இப்போ நீங்க இருக்கிற நிலையிலே என் பேச்சே உங்களுக்கு எடுபடாது… அப்புறம் வர்றேங்க…

(அவசரமாக வெளியேறுகிறான்)

சம்:- வள்ளுவன் குறள் பொய்த்துவிடுமா .. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும் தானே திவாகரம் வஞ்சித்தாயே என்னை.. உன் மகன்என்னிடம் வேலைகோரி வருகிறான்… வஞ்சம்… சரியான வஞ்சம் தீர்க்கப் போகிறேன்… பழிக்குப் பழி…

சுகு:- அப்பா அப்பா இதென்ன, கொஞ்சங்கூட பண்பில்லாமெ பழிவாங்கணும்னு என்ன எண்ணமப்பா உங்களுக்கு? எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணா செய்யாமை தலையப்பா…

சம்: இல்லை சுகுமார்.. நீ போ… நாளைக்குப் போய் பெண் பார்க்க வேண்டும்… தணிகாசலம் நாளைக்கில்ல வரச் சொன்னான்.

சுகு:- எதற்கப்பா. ஏன்? யாருக்கப்பா கல்யாணம்?

முனு:- சின்னய்யா, உங்களுக்கில்லாமே பெரிய ஐயாவா கட்டிக்கப்போறாரு கண்ணாளம் தம்பி கேக்கறதே ஒரு தினுசா இருக்கு..

குரல்:- ஐயா. ஐயா.

முனு:- அட, இவன் இன்னும் போகலையா…

சம்:- யார்ரு அவன்?

முனு:- வேறே யாரு, நொண்டிப் பிச்சைக்காரன் தான்.

(போகிறான்)

சுகு:- அப்பா எனக்கு பிடிக்கவில்லையப்பா.. எனக்குக் கல்யாணமே வேண்டாம்.

[உள்ளே போகிறான்]

சம்:- டேய் என்னடாது குழப்பம் பண்றே…

[காரியதரிசி ஏகாம்பரனுர் நுழைய]

…வாப்பா, ஏகாம்பரம்..என்னமோ தெரியலையே..,பையன் கல்யாணம் என்றதும் ஓடறானே.

ஏகா:- அவ்வளவுதானே. பிரன்ஸ்களுக்கு இமீடியட்டா சொல்லி, வரச் சொல்லப் போயிருப்பான்.

சம்:- அட, அது இல்லேப்பா… கல்யாணமே வேண்டான்றான். நீ என்னமோ…

முனு:- (வந்துகொண்டே) அரையுங்குறையா காதுலே வாங்கிண்டு நிறை செய்யப் பார்த்தா.

[ஏகாம்பரம் கையைஓங்க, வாயைப்பொத்திக் கொள்ளுகிறான்]

ஏகா:- அதிசயமால்ல இருக்கு…தம்பிக்கு வேறே யார் மேலாவது,

முனு:- 'லவ்' ஏற்பட்டிருக்கானு கேக்க நீங்களா ..

ஏகா:- சீ! போடா…

சம்:- ஏண்டா எதுக்காகடா இங்கே மறுபடி வந்தே.

முனு:- அந்த நொண்டிப் பிச்சைக்காரன், பேனாவை திருப்பிக்கொடுத்தாங்க… ஆனா, பாவம் அந்த ஐயாவைக் காணோமே….

ஏகா:- நல்ல சமயத்துலே ஞாபகம் பண்ணினே! ஏகாம்பரம். மோகன்னு யாராவது குமாஸ்தா வேலைக்கு வந்தா, வேலை காலி இல்லைன்னு சொல்லிவிடு….

ஏகா:- இன்னும் குமாஸ்தா வேலைக்கு வேற ஆள் வரலியே…

முனு:- அட, என்னுங்க! நான் இல்லே.... நான்தான் இனிமே பெர்ஸனல் செக்ரடரி (ஏகாம்பரம் முறைக்கவே) இல்லே அது நீங்க....நான் இனிமே க்ளார்க் .... இனி வர்றவன்தான் சர்வன்ட்.

சம்:- ஏது....இன்னும் கொஞ்ச நாளானு என்னையே,

முனு:- டிஸ்மிஸ் கொடுத்துடுவேன்னு பயங்களா, ஊம் ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை தள்ளினுப் போல சே... சே....

ஏகா:- டேய் என்னமோ சமமாப் பேச லாம்....சகஜமாப் பழகலாம்... சந்து பொந்துலே பேசரூப் போல என்னடா எசமான் கிட்டே பேச்சு... போடா போ....

[முனுசாமி போகிறுப்போல் சென்று மீண்டும் வந்து நிற்கிருன்]

....ஏங்க திவாகரத்தின் பிள்ளையா வந்தான் ?....

சம்:- ஆமாம் அந்த நன்றி கெட்டவனு டைய பிள்ளைதான்... அவன்கூட பத்து வருஷமா எங்கோ போயிட் டானுமே அவன் குடும்பம் இப்பொ தவிக்குது...என் மனசுகூட தவிக் குது.... ஆனு வள்ளுவர் சொல்லலே.,.

முனு:- நன்றி மறப்பது நன்றன்றுன்னு

சம்:- ஆ....அதுபோல, செய்ந்நன்றி மறந்த அவனுக்கு உயர்வு ஏற்படுத் தலாமா நாம்? அவன் குடும்பத் துக்கா நன்மை செய்யறது....அவன் தான் நமக்கு தீமை செய்தானே..

] சுகுமார் வந்து]

சுகு:- அப்பா.... அப்பா .... வள்ளுவர், நன்றி மறப்பது நன்று அன்று என்று மட்டுந்தான் கூறினரா.... அதற்குமேல் கூறியதை மறந்துடா தீங்க....

சம்:- என்ன கூறினர் ?

முனு:- அதாங்க... (தலையைச் சொரிந்து விட்டு) நன்றல்லது அன்றே மறப் பது நன்றுன்னு.

சம்:- டேய் முனியா... உன்னை என்னு சொல்றதுன்னே புரியலேடா நீ வந்து....வந்து... மகா....

முனு:- ஊம் முனுசாமி முனுசாமிதாங்க

]முனுசாமியும்,சுகுமாரும் போகின்றனர்]

ஏகாம்:- வரேங்க .. மோகன்வந்தாவேலே இல்லேன்னு சொல்லிடறேன்,

[போகிருர்]

சம்:- நன்றல்லது அன்றே மறப்பது நன்று....சுகுமாருக்கு ஏன் அவ்வ ளவு ஆத்திரம்...ஆம்....

[சமையல்காரன் நமசிவாயம் வந்து]

நமசிவாயம்:- அந்த ஏகாம்பரம் போயிட் டாரா... உம்....வாங்க நீங்கசொல்லிய படியே வெங்காய சாம்பார் வைச்சி ருக்கேன்...ஏவ்

சம்:- என்னடா அது...

நம:- ஒண்ணுமில்லீங்க நான் சாப்பிட் டுட்டேன்...

சம்:- சரிதான் போ இன்னிக்கு எனக்கு சாப்பாடு வேண்டாம். மனசும் சரி யில்லே. வயிறும் சரியில்லே,

நம:- (போய்க் கொண்டே) உம். அது சகஜம். பணக்கார வீட்டிலே இப் படித்தானே. ஏவ்... ஐயா மனசு பெரிய மனசுதான் சாப்பிட்டுட்டு துக்காக என்னை கோவிச்சுக்க லேயே...

—திரை —

அங்கம் 1

காட்சி· 4 இடம் : சம்பந்தர் வீட்டு முன்வாயில்

உறுப்பினர்கள்:- நொண்டிப் பிச்சைக் காரன் (திவாகரம்பிள்ளை)
மோகன்
முனுசாமி
ஏகாம்பரம்

பிச்:- சம்பந்தம் உன் முகத்திலே விழிக் கக்கூட எனக்கு அருகதை இல்லே. இதோ, இந்தக் கடிதம் உன்கையில் சேரவேண்டும். எதிரிடையாக எதை யும் சொல்லத் துணிவின்றி, கடிதம் மூலம் மன்னிப்பு கேட்கிறேன். என் னுடைய மக்களின் நல்வாழ்வைக் கோருகிறேன். நான் உன்னை வஞ் சித்தேன். ஆம். துரோகம் செய் தேன். நீ என்னைப் பழி வாங்கினு லும் சரி நீ செய்யப்போகும் செயல் எந்த விளைவைக் கொண்டு வந்தா லும் எப்படியும் நான் பழிவாங்கப் படுவது நிச்சயம் தான் சம்பந்தம்

இந்த ஏழையை மன்னிக்க மாட்டாயா? உன் எதிரில் வரக்கூசும் உள்ளமுடைய இந்தக் கோழையை மன்னிப்பாயா?

[முனுசாமி வருகிறான்]

முனு:- ஏய்! நீ இன்னும் போகலையோ... என்னடா நோட்டம் விடறே; பல்லு ஆட்டங் கண்டுடும். ஓட்டமா போயிடு ஓ! காது வேறே இல்லையா....வாட்ட சாட்டமா இருந்தும்.

[மோகன் வருகிறான்]

ஏங்க. இந்தாங்க உங்க பேனு இந்த பிச்சைக்காரன் உங்ககிட்டே கொடுக்கச் சொன்னுங்க;

மோ:- இதுக்காகத்தாம்ப பாதி வழியிலேயே திரும்பி வந்துட்டேன்.

[ஏகாம்பரனார் வருகிறார்]

[பிச்சைக்காரன் முன்னே ஓடி வந்து]

பிச்:- ஐயா. ஐயா. (ஒரு கணம் துணுக்குற்று) இந்த கடிதத்தை சம்பந்தம் அவுங்ககிட்ட கொடுத்துடுங்க..,

ஏகா:- ஆமாம். நீ யாரப்பா. (யோசிக்கிறார்)

பிச்,- என்னைத் தெரியலீங்களா....நான் வந்து....வந்து பிச்சைக்காரன் தாங்க

ஏகா:- ஓஹோ! உன் மூலமா லெட்டர் லெட்டர் கொடுத்தனுப்பினுங்களே. சரி. நீபோ. நான் கொடுத்துடறேன்

[மோகனைப் பார்த்து]

....ஏன் தம்பி நீதான் அந்தமோகன் என்றவனு?

மோ:- ஆமாங்க....

பிச்:- (திக்பிரமையோடு) மோகன்

[முனுசாமி அவனை கேலியாகக் கவனிக்கிறான்]

ஏகா:. இப்போ, வேலை ஒன்னும் காலி கிடையாது....நீ....போ

[போகிறார்]

மோ:- என்ன? எனக்கென்று வேலையே இல்லையா....வேலை கிடைக்கும்னு நம்பினேன் .... அதுவும் கிட்டவில்லை ஐயோ....

முனு:- கிட்டாதாயின் வெட்டென மற....

[போகிறான்]

மோ:- மறப்பது .... எதை மறப்பது.... யாரை மறப்பது.... ஐயோ.... என் தந்தை செய்த அபகாரம்....பாதகம் இப்போது என்னைப் பீடிக்கிறதே.... அதை மறப்பதா அல்லது அவர் செய்த பாதகத்தால், இதோ இப்போது வஞ்சிக்கப்படுகிறேனே.... என்னையே மறப்பதா.... ஐயோ.... கோமளம்....

[பிச்சைக்காரனும் கண்ணீர் உகுக்கிறான்]

....அம்மா உங்களை மறப்பதா. இல்லை... இல்லை.. என்னையே மறந்து போகிறேன் இந்த உலகையே மறந்துவிடுவேன்—

[வெறி பிடித்து ஓடுகிறான். —பிச்சைக்காரன் அலறுகிறான் [

தச்:- மோகன். கோமளம். ஆம்.. ஆம்... என் மகனே தான் அவன் ஐயோ, என்னல். நான் செய்த தீங்கு என் மக்களையும் பழிவாங்க வேண்டுமா ஐயோ ...

[இரு அடி எடுத்து வைத்து தள்ளாடி போகிறான்]

—திரை—

அங்கம் 1

காட்சி: 5 இடம்: சம்பந்தர் வீட்டு அறை.

உறுப்பினர்கள்: சம்பந்தம் பிள்ளை
வேலைக்காரன் முனுசாமி
காரியதரிசி ஏகாம்பரம்
சுகுமாரன்
சமையல்காரன் நமசிவாயம்

சம்:- டேய். முனி...

முனு:- என்னுங்க.

சம்:- ஏகாம்பரம் எங்கேடா போனரு,.

முனு:- இல்லீங்க.. அந்தப்பய—பிச்சைக்காரப் பயங்க என்னமோ லெடரு கொடுத்து உங்ககிட்ட கொடுக்கச் சொன்னன்.

சம்:- எங்கிட்டேயா. பிச்சைக்காரப் பசங் கக்கூட மனு போட ஆரம்பிச்சிட் டாங்க....

முனு:- அந்த கடிதாசைப் படிச்சுண்டு என்னமோ, பெரிசா யோசனைப் பண்ணறுருங்க...

சப்:- அது. சரி. சுகுமாரன் எங்கே? சாப் பிட்டுட்டானு..?

முனு:- இல்லீங்க. வயிறு சரியாய் இல்லே யாம்..

சம்:- அடடே, அப்போ,டாக்டரையாவை கூட்டியார்றதுக்கு என்னடா.

முனு:- அட, நீங்க ஒண்ணு இது சகஜ மாச்சே. ஐயாவோட மனசு சரி யில்லேன்னு, வயிறும் சரியாகத்தான் இருக்காது.

சம்:- அவன் மனசுக்கு என்னடா வந் தது ? .

முனு:- அது தெரியாதுங்களா.. அப் பவே கண்ணலம் கட்டிக்க மாட் டேன்னுரில்ல, யார்மேலாவதுஏதாச் சும் ஏற்பட்டிருக்கும். உங்க கிட்ட சொல்ல தயக்கம்.

சம்:- சரிதான். அப்போ, அவன் பிரண்ட்ஸ்க்குத் தெரியுமே.. அவங்க மூலமா தெரிஞ்சிண்டா போச்சி.., ஏண்டா சிரிக்கிறே.

முனு:- உம்... அவங்களுக்கு எப்படிங்க தெரியும்...அவங்களுக்குத்தெரிஞ்சா ஒண்ணு கோட்டா பண்ணுவாங்க ளேன்ற கூச்சம். இல்லாட்டா, எங்கே போட்டியா வருவாங்களோ வில்லனு ஆயிடுவாங்களோன்ற அச் சம். ஏன், நீங்களே போயி கேட்டு டுங்களே...

சம்:- நானே போய் கேட்கலாம்தான்... ஆனு, நாம் தந்தையாச்சே. நாம் கிறின கோட்டை அவனு தாண்ட றதுன்ற அகம்பாவம் வந்துவிட்டால் அப்புறம் ஆத்திரத்திலே எதாச்சும் மனஸ்தாபமாயிடும்.

முனு:- அது முழுக்க முழுக்க சரிங்க... சினிமாவிலேகூட இப்படித்தாங்க பையன் காதலிப்பான் யாரையா வது அப்பன் பேதலிச்சு போவான் அப்புறம் கேட்பானேன் கதை எழுதுகிறவருக்குச்சரியான ப்ளாட்டு கிடைச்சுடும் எங்கிட்ட விட்டுடுங்கோ நான் போய் தெரிஞ்சிண்டு வந்துட றேன்.

சம்:- சரி... சரி... ஏத்தம் இறைக்கிறவன் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு உண்டா... போ. தெரிஞ்சிண்டுவா.

[முனுசாமிபோகிருன்]

... உம் எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணு செய் யாமை தலை. இது இல்ல சுகுமார் கூறினுன். என்ன அர்த்தமோ...

[குறள் புத்தகத்தைப் புரட்டுகிருர்]

ஏகா:- பிள்ளை! .. இத பாருங்க... திவா கரம் எழுதிய லெட்டருங்க.

சம்:- என்னது. திவாகரமா எழுதி பிச் சைக்காரன் மூலம் அனுப்பினுன். என்ன திமிர்...

ஏகா:- இதோ படிக்றேங்க...கேளுங்க.. [படிக்கிருர்]

'சம்பந்தம், உன் முகத்தில் விழிக் கவே வெட்கப்பட்டு இந்த கடிதம் உனக்கு அனுப்புகிறேன். எந்த நாள் தொட்டு உனக்கு உபகாரம் செய்ய மறந்து அபகாரம் செய் தேனே, அந்த நாள் முதல் என் வாழ்வுக்கே — என் மக்களுக்கே துரோகம் செய்துவிட்டேன் — இப் போது அனுபவிக்கிறேன். உன் னைப் பரிகாரம் நான் கேட்கவில்லை., என் மக்கள் வாழ்வைக் கோரப் போவதில்லை... செய்ந்நன்றி மறந்த எனக்கும், என் குடும்பத்துக்கும் உய்தியே இல்லை .. உன்னை மன்னிப் புக் கேட்கிறேன். என்னை மன்னிப் பாயா.

இப்படிக்கு

தவறை உணர்ந்து வருந்தும்

திவாகரன்

...உம்...வெறும் பசப்பு வார்த்தை கள்....

சம்:-கண் கெட்டு போன பிறகு சூரிய நமஸ்காரம் என்ன வேண்டியிருக்கு? மன்னிப்பு படலம், பலே பயன் எதிர் பார்த்து எதையும் செய்யலாமில்லே நேரில் வர வெட்கமாமே.

ஏகா:. ஊம்; தெரியாமலா சொல்லுவாங்க, சோழியன் குடுமி சும்மா ஆடாதுன்னு .... அவனுக்கு ஒரு பொண்ணு இல்ல .... அதுக்கு நம்ப தம்பியை முடிபோடறதுக்கு இதுவும் ஓர் நங்கூரம் தான்.

சம்:- சரியாக சொன்னே....

[முனுசாமி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்து நிற்கிறான்.]
என் செல்வங்களை நல்ல ஸ்திதிக்கு கொண்டுவரச் சொல்ல கேக்கப் போறதில்லேன்ற மாதிரி எனக்கு ஞாபகம் ஊட்டறானே .... அவங்களை மறந்திடாதேன்னு....

முனு:- எசமான் ! இனி நடக்கிறதைப் பாருங்க....

சம்:- டேய், முனுசாமி

ஏகா:- என்னடா. எசமானுக்கே புத்தி சொல்ல வர்றே. இட்ட வேலையைச் செய்துட்டுபோ....

முனு:- அதுக்கெல்லாம் மட்டும் வேலையாளுன்னு மதிப்பு இல்லீங்க....தன் எசமான் நியாயமா எல்லார்கிட்டேயும் நடந்துக்கணும்ன்ற உறுதி ஒவ்வொரு வேலைக்காரன் உள்ளத்தில் இருக்கணுங்க....அவன் தாங்க 'ட்ரூ ஸர்வன்ட்' ஒரு மனுசன் மன்னிப்பு கேட்டா மன்னிக்கிறதுதான் சரிங்க,

ஏகாம்:- இவன் கிடக்கிறான், பிள்ளை.... நீங்க அளவுக்கு மீறி சலுகைகாட்டி இடம் கொடுத்தது தவறுங்க. திவாகரம் செய்த துரோகம் அவ்வளவு லகுவில் மறக்கக் கூடியதா ?

சம்-- ஆமாம்..•ஆமாம்.

முனு:- எசமான் அவர் மன்னிப்புக்கேட்டப்புறங்கூட நாம்ப முறுக்கினு இருக்கிறது சரியில்லீங்க. இடி இடிக்குது, அது ஓஞ்சப்புறங்கூட தாவர்னம் விடறதில்லையே. அதுபோல தாங்க, சண்டை ஓஞ்சும், சச்சரவு போகாது சச்சரவு தீர்ந்தாலும் பழசையெல்லாம் நினைச்சு புழுங்கறது எங்கே போவது இதுக்காகத் தாங்க சின்னய்யாகூட நன்றல்லது அன்றே மறப்பதுன்னாரு.,

ஏகா:- நீங்க இருக்கிங்கண்ணுதான் பார்க்கறேன். இப்படி இவன் எதிர்த்து பேசறது எனக்குப் பிடிக்கலீங்க. நீங்க இருப்பதினாலேதான் இவன்.

முனு:- அது இல்லீங்க காரணம். நான் நியாயத்தை எடுத்துச் சொல்றதினாலேதான் எசமான்கூடமௌனமாயிருக்காரு.

ஏகா:- போடா. முதல்லே போயி, சுகுமார ஐயாவை அழைச்சிண்டுவாடா பிள்ளை, சுகுமாரனுக்குப் பெண்ணைப் பிடிச்சிருக்கான்னு பார்க்கணுமில்லே டேய் முனுசாமி போய் அழைச்சிண்டு வா சுகுமாரனை..

சுகு:- (வந்துகொண்டே) அது தேவையில்லை. நானே வருகிறேன் அதோடு நான் பெண் பார்ப்பதும் தேவையில்லை.

ஏகா:-அப்போ தணிகாசலம் பெண்ணை திருமணம் செய்துக்கறதுக்கு தடையில்லேன்னு சொல்றே, அப்படித்தானே..,

சுகு:- அப்படியல்ல ஐயா, நான் கல்யாணம் பண்ணிக்கொண்டால் கோமளத்தைத்தான்..

[நாக்கைக் கடித்துக் கொள்கிறான்]

சம்:- யாரடா. அது கோமளம். அதைச் சொல்லு முன்னே.

முனு:- அதாங்க. இவரு காதலிச்ச பொன்னு. ஆனா அதுவும் இப்போ திவாகரம் பிள்ளை அவுங்க பெண் கோமளமும் இருவரும் ஒருத்தரே தாங்க..

ஏகாம் : } என்ன ? திவாகரத்தின்
சம் : } பெண் கோமளத்தையா..?

சுகு:- ஆம்; அப்பா மோகன் கோமளத்தின் அண்ணன் அவன் வந்துவிட்டுப்போனதால் தெரிந்துகொண்டேன்.

ஏகா:- சுகுமார். அப்பா மனதை நோகச் செய்யாதே. திவாகரன் துரோகச் செயல் செய்தோன்.

சுகு:- இருக்கலாம்; இப்போது மன்னிப்பு கேட்கிறாரே.

ஏகா:- கேட்டால் மட்டும்; என்றைக்குத் துரோகம் செய்தானோ அன்றிலிருந்து உன் தந்தைக்குப் பகை,

சுகு:- அப்பா....அவர் ஒருகாலத்தில் உங்கள் நண்பர்....தற்போது வைரி.... ஆனால் 'நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே ஒட்டாரை ஒட்டிக் கொளல்' என்ற குறள்படி உணர்ந்து தாங்கள் நடந்தால், அவர் நண்பராக வழியிருக்கிறதே....

ஏகா:- சுகுமார்....நீ சாதுரியமாகத்தான் பேசுகிறாய்.... ஆனால் உனக்கு அனுபவமில்லை....இத்தனை காலங்கடந்து அவர் மீண்டும் நண்பனானால் மட்டும் என்ன? பழையபடியே முருங்கை மரத்தில் ஏறின வேதாளம் போல் ஆக மாட்டான் என்பது என்ன நிச்சயம்?.... தக்கார்க்கு தகுந்தபடியல்லவா நாம் ஜாக்கிரதையாக இருக்கணும்....உங்கள் அப்பாவிற்கு யார் எப்படிப்பட்டவர் என்று தெரியாதா இல்லை, அவருக்கு அறிவுதான் இல்லையா....?

சுகு:- அறிவு! அப்பா, உங்களுக்கு அறிவு இருக்கிறது அல்லவா....நான் கேட்கிறேன்....இல்லை, நீங்கள் விரும்பிப் படிக்கும் இந்தக் குறள் புத்தகத்தில் வள்ளுவர் கூறுகிறாரே.... அப்பா, அறிவுடையது எது....பண்புள்ள செயல் அறிவுக்கு உகந்ததாயிற்றே....'நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும் பண்பாற்றார் ஆதல் கடை' யென்று பண்பு கூறுகிறாரே....ஏன் அப்பா பேச மறுக்கிறீர்கள்....திவாகரன் நட்பு மறந்து பகைவர் போல் ஆனாலும், தாங்கள் பண்பு நீக்குதல் எப்படியப்பா அறிவாகும்?

ஏகாம்:- சுகுமார் உன் வழியிலேயே வருகிறேன்....வள்ளுவர் பொதுவாகத்தான் கூறினார், பண்புடைமை அறிவுடைமை என்று அதுபடியே எல்லாம், எல்லாரும், எப்போதும் இருந்துவிட முடியுமா....உலகொப்ப நடக்க ஒழுகலார் பலகற்றும் அறிவிலாதார்தான்....உன் தந்தை பெரியவர், அவர் அறிவார். அனுபவத்தை வைத்தே எதையும் எண்ணி தீர்மானம் செய்வார்... என்ன இருந்தாலும் இப்போது திவாகரன் வேறு நாம் வேறு. அவன் மாற்றான்போல் தானே இப்போது....சான்றோனாகிய உன் தந்தை உணராததை—

சுகு:- (கோபமாக) மிஸ்டர். ஏகாம்பரம் 'ஆற்றுவார் ஆற்றல் பணிதல்—அது சான்றோர் மாற்றாரை மாற்றும் படை' என்ற குறளாவது என் தந்தைக்கு நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன்....அவர் பேசாது இருக்க நீர் என்ன அவருக்கு வக்கீலா.... அவர் சான்றோரானால் பணிந்து, இப்போது திவாகரத்தை நண்பராக கொள்ளலாமே.

சம்:- சுகுமார் பொறு! ஏகாம்பரம் என் மனமே குழம்பிக் கிடக்கு....முதலில் நீங்கள் இருவரும் இங்கிருந்து போங்கள் ...

[ஏகாம்பரம், சுகுமார் போகின்றனர்.]

....டேய் முனுசாமி, நீயாவது சாந்தமா பேசுடா... ஏதாவது, சொல்லுடா....

முனு:- எசமான்....திவாகரம் பிள்ளை துரோகம் பண்ணினது குற்றம்....

நீங்ககூட, நான் ஏதாவது தப்புபண்ணினா, என்னமோ சொல்லி மன்னிச்சுடுவீங்களே ஏதிலார் குற்றம் போல நம் குற்றத்தையுங் கண்டால் ஒரு தீதும் இல்லேன்னு...

சுகு:- (வேகமாக வந்து) முனுசாமி அவர் உன் எசமான்... அரசனைப் போன்றவர்! தன் குற்றம் நீங்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் என் குற்றம் ஆகும் இறைக்கு.' அந்த மாதிரி பேசடா...

[ஏகாம்பரமும் வருகிறார்]

முனு:- உங்களை யாருங்க கூப்பிட்டது... ஒரேயடியா குறளா கொட்டிட்டா

எப்படிங்க...தேளு கொட்ற மாதிரி வெடுக்கு, வெடுக்குன்னு

ஏகா:- சுகுமார்...அப்பா இப்போது குற்றமே செய்யவில்லை... அவர் குற்றத்தை அவர் எண்ணிப்பார்க்கக் கூட இடமில்லை.. செய்ததெல்லாம் திவாகரம்தான்... அவன் செய்த துரோகத்துக்கு அவனே எங்கோ போயி 10 வருஷம் ஆகி இப்போது வந்து மன்னிப்புக் கேட்கிறான்... அவன் எங்கே இருக்கிறானே.

முனு:- யாருமில்லீங்க...அந்த நொண்டிப் பிச்சைக்காரன் தான்னு நான் நினைக்கிறேன்...ஏன்னு, அவனில்ல மோகன் ஐயாகிட்டேயிருந்து பேனா வைவாங்கிக் கடுதாசு எழுதின..

ஏகா:- அப்படியா... அப்போ அவன் செய்த குற்றத்திற்கு சரியான தண்டனைதான் அனுபவிக்கிறான்...சாதாரண குற்றமா ...செய்நன்றி மறந்த செயலாயிற்றே... இல்ல பிள்ளை வா அ...

சுகு:- நீர் இன்னும் திவாகரத்தின் குற்றத்தையேதாம் எடுத்துச் சொல்வீரோ....

ஏகா:- அந்த செயல்தான் ஆணித்தரமா அவன் புகழைக் கெடுக்கும் பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தங் கருமமமே கட்டளைக்கல்லாச்சே.

சுகு:- பெருமை அற்றம் உறைக்கும்.... உமதுசிறுமை குற்றம்தான் கூறும்,

[ஏகாம்பரம் திக்பிரமையோடு நிற்க]

முனு:- காரியதரிசி ஐயா....சுகுமார ஐயா குறள் போட்டியில் வாங்கின ப்ரைஸெல்லாம் பாதிபீரோ ரொம்பிடுச்சு ஞாபகம் வச்சுக்குங்க....

சம்:- டேய், முனுசாமி, சுகுமார் பெரியவரை என்எதிரில் அவமதித்தாபேசுகிறீர்கள்....போங்கள்....சே....சே

[முனுசாமி, சுகுமார் இருவரும் போகின்றனர்]

....ஏகாம்பரம்.... நீபோ .... மீண்டும் நாளைக்காலைவா...அவங்களைப் பத்தி இப்பவே தெரிஞ்சிண்டு வந்து எங்கிட்ட கூறுங்க...சுகுமார் சொல்றதும் நியாயந்தான்'

[ஏகாம்பரம் போகிறார்]

...திவாகரன் செய்நன்றி மறந்தான்... இப்போது அவன் அடைந்த முடிவு எனக்குத் திருப்தியா தருகிறது .. இல்லையே வேதனையன்றோ தருகிறது நான் என்னதான் செய்வது...?

குரல்:- 'வேதனை ... உனக்கு வேதனை ஆனால் திவாகரத்திற்கு ஏதும்செய்யாது வாளா இருக்கிறாயே, அது வேதனையாக இல்லையோ...ஆடு நனைகிறது ஓநாய் ஓல மிடுகிறது...இரக்கத்தினலா ... இல்லை ஆட்டை ருசி பார்க்க வேண்டு மென்ற அரக்கக் குணத்தினல்...அந்த மிருகத்தனம் தான் இப்போது உன்னிடம் இருக்கிறதா..?

திவாகரனை வஞ்சம் தீர்க்கப் போகிறாயா. ஏன்? வள்ளுவன் குறளைப் படிக்கிறாயே. அவர் படிதாம் வஞ்சம்தீர்த்துவிடு... 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடு' அதுதான் நீஅவனை பழிவாங்க ஒரே வழி. வஞ்சம்தீர்க்க அதைவிட வேறு எந்த மேலான வழியை நீ கைக்கொள்ளப்போகிறாய் ..

சம்:- ஆம்; ஆம்..இன்னா செய்தாரை அவர் நாணமடையும்படி நல்ல செயல்—செயலை செய்தே பழிவாங்குவேன். சரியான வஞ்சம்தான். சே! அதுவும் ஒரு வஞ்சமா..இல்லை இல்லை. திவாகரன் அன்று என்னை திட்டிய சொற்கள் தழும்பாக என் உள்ளத்தில் இருக்கிறதே. அவனைப் பழிவாங்க.

முனு:- எசமான். இந்தக் கடுதாசிலே என்னவோ சுகுமாரு எழுதியிருக்காருங்க. அவர் உங்க எதிரே வர்றதுக்கு பயமில்லையாம். எங்கே எக்கசக்கமாப் பேசி பேச்செல்லாம் முரண்பட்டுடுமோன்னு பயப்படறாங்க.

[போகிறான்]

சம்:- சுகுமார். என் உள்ளத்தை நீயெங்கே அறிவாய். திவாகரத்தின் செய்நன்றி மறந்து இழைத்த

துரோகம் என் நெஞ்சை புழுங்கச் செய்கிறதே, அதை எப்படி உணர்வாய் செய்ந்நன்றி மறந்த அவனுக்கு எந்த வகையிலும் உய்வே கிடையாது நீ என்ன எழுதியிருக்கப் போகிறாய்? சமாதானம் செய்ய சகல நிதானங்களையும் மாற்றுவாய்; அவ்வளவுதான்....

(படிக்கிறார்)

அப்பா,

தாங்கள் வள்ளுவரைப் படிப்பதைக் கண்டு மகிழ்கிறேன். அதனால்தான் நான் நம்பினேன்; என் எண்ணப்படி தாங்கள் நடப்பீர்கள் என்று, ஆனால் தாங்கள் வெறும் புத்தகப் பூச்சியாகத்தான் இருக்கிறீர்கள். பிறர் கூறும் கருத்தை ஏற்க மறுக்கிறீர்கள்.

சம்:- என்னது? அனுபவத்துக்கில்ல நான் அறிவுக்காகப் படிக்கிறேன். என்கிறானே....

(படிக்கிறார்)

....நான் உணர்கிறேன். திவாகரம் பிள்ளை செய்நன்றி மறந்ததினால், அது ஆறாத புண்ணாக உங்கள் உள்ளத்தில் இருக்கிறது. அதனால் அவர்கட்கு உய்வே இல்லை-உய்வுக்கு வழியே ஏற்படுத்தக்கூடாது எனத் தவறாக பொருள் செய்துவிட்டீர்! அட்டைபோல குறளைப் படித்ததினால்.

பழிவாங்குவேன், வஞ்சம் தீர்ப்பேன் என்றதுமே நீங்கள் திவாகரத்திற்கு செய்த உபகாரம் போய் விட்டதப்பா...

சம்:- அவன் செய்ந்நன்றி மறந்ததை என்னால் எப்படி மறக்கமுடியும். அதனால், நான் செய்த உபகாரம் போய் விட்டதோ.

[மேலும் படிக்கிறார்]

அப்பா, செய்ந்நன்றி மறந்தவர்க்கு உய்வில்லை என்று வள்ளுவர் கூறு முன்பாக, முன்னதாக ஓர் குறளை கூறியே அதைக் கூறுகிறார். அதை தாங்கள் உணரவில்லையப்பா.... 'கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த ஒன்று நன்றுள்ளக் கெடும்' என்ற குறளைப் பாருங்கள். கொலைத்தொழில் போல இருக்கும் உங்கள் பழிவாங்கும் எண்ணம் நீங்கள் என்னதான் நல்லது செய்திருந்தாலும், அவற்றைபோக்கடிக்கும் அப்பா.... அதற்கப்புறமே செய்ந்நன்றி மறந்தவருக்கு வரும் கேட்டை கூறுகிறார். இயற்கையாக அளிக்கும் கேடுதான். மக்கள் இனத்தால் அளிக்கவேண்டிய கேடில்லை.

இனியாவது வள்ளுவர் உங்கள் உள்ளத்தை மாற்றட்டும்,

சம்:- (மனந்திருந்தி) ஆம்; சுகுமார், நான் செய்த நற்செயல், பழிவாங்குவேன் என்று கூறியபோதே போய்த்தான் விட்டது. போய்த்துத்தான்விட்டது. இல்லாவிட்டால் இன்னா செய்தாருக்கு இனியவே செய்யாத எண்ணமுடையவனாக இருந்துவிட்டேனே.... இனி என்னிடம் எந்த 'பெரியவன்'ற சால்புடைமை எப்படி இருக்க முடியும்....சுகுமார் உன் எண்ணப்படியே செய்வேன்....அனாதரவான திவாகரத்தின் குடும்பத்தைக் காப்பேன்....

[ஏகாம்பரம் ஓடி வருகிறார்]

ஏகா:- ஐயா....ஐயா....அந்த மோகன்....

சம:- என்ன ஏகாம்பரம்? ஏன் இப்படி பதறுகிறே....என்ன நடந்தது....

ஏகா.- ஐயா, நான் வேலை இல்லேன்னு சொன்னதும் அந்தப் பிள்ளைமனம் உடைந்து தவறாகத் தற்கொலை செய்து கொண்டுட்டான்....

சம்:- என்ன? மோகன் தற்கொலை செய்துக்-....

ஏகா:- என் மனசுக்கூட அடிச்சிக்குதுங்க அங்கே இருந்த அந்த பாழுங்கிணத்துலே விழுந்து உயிரைப் போக்கிக்கிட்டானுங்க .... அவங்க அம்மா....திவாகரத்தின் மனைவி அலமு, மோகன் இறந்தான்றதும் உயிரை விட்டுட்டாங்களாம்....திவாகரத்தைப் பார்த்தாதான் இன்னும் வருத்தமா இருக்குது....அவனுக்குக் கூட ஆஸ்த்மாவோ என்னவோங்க. ஒரே இழுப்பா இழுத்துண்டு, தான்

செய்த துரோகத்தையே நினேச்சி அழுறுங்க....

சம்:- ஏகாம்பரம்....ஐயோ.... திவாகரம் .... நான் பாவி!....

[சுகுமாரும், முனுசாமியும் வர]

....சுகுமார் வஞ்சம் தீர்க்கிறேன் என்று நல்ல பண்போடு வாழும் வகையறியாத மூடனுகிவிட்டேன்.... ஐயோ....திவாகரம்....

(ஓடுகிறுர்)

ஏகாம்:- வா, தம்பி உன் கோமளத்தைப் பார்த்தால் ஒரே பரிதாபமாயிருக்கு அந்த பாழாப்போன கிணற்றை இனிமே மூடித்தொலேக்க நாமாவது முயற்சி எடுத்துக்கணும் இல்லாம போனு, இன்னும் எத்தனே பேரை அது பலி வாங்குமோ ?

(போகிறுர்)

சுகு:- கோமளம் (கண்ணீர் உகுக்கிருள்) உன்னே நான் அனுதையாக விட மாட்டேன்... விடவே மாட்டேன்.... ஒரே சமயத்தில், உன் தாயையும் தமையனேயுமா நீ இழக்கணும்... ஐயோ, கோமளம்....

(ஓடுகிறுன்)

முனு:- என்ன உலகமடா இது....சினிமா வில் வர்றமாதிரி இல்லே ஆயிட்டுது கதை....அப்போ, சுகுமாருக்கும் அந்த அம்மாவுக்கும் கண்ணுலம் ஆகப்போறது, ஆனு அதுக்குள்ள

[நமசிவாயம் வருகிறுன்]

....இதோ பாருப்பா நமசிவாயம்.... இதுக்கு முன்னே அந்தப் பாழுங் கிணத்தை மூடயாருக்கும் யோசனே வரலே....இப்போ பலியா, பாவம்! அந்த மோகன் ஐயா விழுந்து உயிரை விட்டதுக்கப்புறம், அந்தப் பாழுங்கிணத்தை மூடப்போறுங்க ளாம்....சே....சே அதுக்கப்புறம் தான் பெரிய எசமான் மனமும் மாறிச்சு....

நமசிவாயம்:- ஆமா....ஆமா .... கொஞ்சங் கூட துன்பமில்லாம எந்த இன்பம் தான் வருகுது....சின்னய்யா கூட சொல்லுவாரே. No pains, no gains அருமையாக வெங்காய சாம்பார் தயாராகுமுன்னே வெங்காயத்தை நறுக்கறப்போ கண்ணுலே நீரா கொட்டி, அதனுலே ஒண்ணும் தெரி யாம விரலே வேறு நறுக்கிண்டு, அப் புறம் கனஜோரா வெங்காய சாம் பார் தயாராகுது...அப்புறம்'ல கன குஷியா அதை ருசிச்சு சாப்பிட முடியுது.

—திரை—

அங்கம்: 1

காட்சி: 6 இடம். மோகனின் வீடு

உறுப்பினர்கள்:- மோகன்
அலமேலு
கோமளம்
திவாகரன்
ஏகாம்பரம்
சம்பந்தம்
சுகுமார்
முனுசாமி

அமைப்பு:- மோகனும். அவன் தாயும் இறந்துள்ளனர்.

கோ:- ஐயோ, அம்மா... நீயும் போய் விட்டாயா...அண்ணு...

[கதறியழுகிருள்]

சுகு:- கோமளம்; அழாதே... (கண்ணேத் துடைத்துக்கொண்டு) ... இதோ, உனக்கு ஆதரவாக நான் இருக்கி றேன்... அதை என் தந்தை ஆட் சேபிக்கவே மாட்டார்...இது நிச்ச யம் கோமளம்...மனதைத் தேற்றிக் கொள்... இதோ, இதோ உன் அப்பா இருக்கிறுர் பார் கோமளம்...

கோ:- (திவாகரத்திடம்) ஐயோ, அப்பா உங்களே இந்நிலேயிலா நான் பார்க்க வேண்டும்.. தாடியும் மீசையும் நரைத்துப்போன தலேயுடன் ... ஐயோ ஒளி மங்கிப் போய் குழி வீழ்ந்துவிட்ட கண்கள்... அப்பா இந்த ஒடிந்துபோன காலுடன் நொண்டி, நொண்டியாகி.. ஐயோ

சம்:- ஐயோ... திவாகரம் (வாயை மேல் துண்டால் புதைத்துக்கொண்டு விம்முகிறுர். திவாகரன் மூச்சை

இழுத்தபடி இருமவே போய் அவரை பிடித்துக்கொள்கிறார்.)

....திவாகரம், இதோ என் மகனை சுகுமாரனை உன் மகளுக்கு மணாளனாக்குகிறேன்....பல வருஷங்கள் கழித்து உன் மகளைப் பார்க்கிறாய்... நம் விரோதமெல்லாம் மறந்தேவிடுவோம்....

[திவாகரன் சம்பந்தத்தை மார்புறத் தழுவிக் கொள்கிறார்]

....நம் அன்னியோன்னியம் .... நமது முன்பு குறையாது இந்த அன்பு சினேகிதத்திற்கு சின்னமாக, உன் மகளையும் என் மகனையும் தம்பதியாக்குகிறேன் .... இல்லை .... தம்பதிகளாக்குவோம்....

திவா:: உம் .... உம் .... சம்பந்தம் என் காதையே நம்ப முடியவில்லையே........ சுகுமாரை கோமளத்துக்குக்கொடுப்பேன் என்று கூறுகிறாய்.... நிச்சயமாக நான் நம்பலாமா....நமது நட்பு இன்னும் மங்கவில்....லையே....

சம்:- இல்லை .... திவாகரன் சம்பந்தன் வார்த்தையில் உனக்கு அவ்வளவு கூடவா நம்பிக்கையில்லை திவாகரன் இதோ, கூறுகிறேன்... ஏகாம்பரம், நீங்க இப்பவே போயி ஏற்பாடு பண்ணுங்க....சுகுமாரனுக்கும், கோமளத்திற்கும் திருமணம் என்று.

முனு:- ....ஆமாங்க....வெட்டிங் பத்திரிகை போடுங்க...

ஏகா:- டேய் முனுசாமி...நீயும் கூடவாடா

[ஏகாம்பரம், முனுசாமி போகின்றனர்]

சம்:- திவாகரம்... சரிதானே .... அம்மா, கோமளம் இப்படிவாம்மா.... சுகுமார்.

[இருவர் கையையும் சேர்க்கிறார்]

....இப்போ திருப்திதானே .... திவாகரன்...

திவா:- சம்பந்தம்...சம்பந்தம்...

[சம்பந்தத்தை கட்டிக்கொண்டு கேவுகிறார்]

...உனக்கு இந்தப் பாவி உபகாரம் எதுவும் செய்யாவிட்டாலும் அபகாரமாக துரோகம் இழைத்துவிட்டேன் என்னை மன்னிப்பாயா ... உன் பெருந்தன்மையான உள்ளம்... ஐயோ...

[மாரைப் பிடித்துக்கொண்டு இருமுகிறான்]

இனி...இனிமேல்...என்னால் அதிக நாள்... உம்...சில வினாடிக்கூட வாழ முடியாது...

கோ:- ...அப்பா...

சம்:- பேசாமலிரு திவாகரன் ... பாவம். கோமளம் ஒரே சமயத்தில் தாயையும் தமையனையும் இழந்து ..ஐயோ (அழுகிறார்)...இப்போது அவள் தன் தந்தையை இழக்கச் சொல்கிறாயா வேண்டாம் அப்படிச்சொல்லாதே என் நண்பன் நீ...உன்னை இழக்க நான்...

திவா:: சம்பந்தம்...இதென்ன, அசட்டுத்தனம்... தாமரை இலைமேல் இருக்கும் நீர் முத்து வழுக்கி மறைந்து... போவது போல் எல்லோர் வாழ்க்கையும்...நானும் அதுக்கு விதி விலக்கா...இதோ, பார்...பாழும்காச நோய் என்னை அணுஅணுவாக சிதைத்துவிட்டது ... பாவி, நான் செய்த வினையின்விளைவு கோமளத்தின் புனர்வாழ்வு கண்டு, நம் நட்பு புனர்ஜென்மம் எடுத்ததுகண்டு... மகிழ்ச்சியே அடைகிறேன்...இப்படிப்பட்ட பண்புள்ள, உன்னை நான் புரிந்து கொள்ளாது வஞ்சனை செய்துவிட்டேனே...அதற்கு நீ தூற்றும் எந்தப் பழிச்சொல்லுக்கும் நான் அருகதையுள்ளவன்... ஆனால் நீ செய்ததோ...எனக்குச் சந்தோஷம் தான். என்னை வெட்கமடையச் செய்துவிட்டாய் நேர்மையான வஞ்சம் தீர்த்துவிட்டாய் உனக்கு ஓர் கைம்மாறும் செய்ய என்னால் முடியாதுதான் உம்...என் கோமளத்தை மனமுவந்து உன் மகனுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லக் கூட எனக்குத் தகுதியில்லை என்னை நீ முந்திக் கொண்டாய்...உம்...என்

னைச்சரியாக ஆனல் நேர்மையாக வஞ்சித்து விட்டாய்...வஞ்சித்--

[லொக், லொக்கென்று இறுமி மாரைப் பிடித்துக்கொள்கிறார்]

சம்:- திவாகரன்...

கோ:- அப்பா...

திவா:- கோமளம் இப்படிவாம்மா...உன்னைப் பிரிஞ்சு பத்து வருஷமாச்சு இன்னிக்குக் காலையிலேகூட உன்னைச் சுகுமாரோட பார்த்தேன்... அப்போகூட ஐயோ சம்பந்தம் நான் பெரிய தவறு செய்துட்டேன் உன் மகன் என் பெண்ணை மணக்கவே மாட்டான்னு...ஏன், என் பெண்ணையே நான் சரியாக அடையாளம் கண்டு கொள்ளவில்லை... ஓர் மாலைப் பொழுதுக்குள் எத்தனை மாறுபாடுகள்...மோகன்... ஐயோ... உங்களோடவே நானும் வருகிறேன் இந்த உலகில் எனக்கென்னவேண்டும்...சம்பந்தம் நீ பொறுப்பாக பண்பாக நடந்துகொண்டாய் என் தவறையெல்லாம் மறந்தாய்...எனக்குத் தக்க நேர்மையான வஞ்சம் தீர்த்துவிட்டாய்...ஆம் சரியான வஞ்சம் தீர்த்து-

[தலையைப் பொட்டென்று போட்டு இறக்கிறார்]

சம்:: திவாகரன்...திவாகரன்...

கோ: ஐயோ...அப்பா ... போய்விட்டீர்களா...

சுகு:- கோமளம்...

[மூவரும் கண்ணீர் உகுக்கின்றனர்]

—திரை—

அலைகடல்

by

M. S. முகமது ஈசா P. U. C. 'A'.

ஆழ்கடலில் அலை ஓய்ந்த நேரம், மெரினாக் கடற்கரையில் மக்கள் நடமாட்டமே இல்லாத வேளை, இடையிடையே வேகமாக ஓடும் கார்களின் ஒலி; இவைகளுக்கிடையே ஓருருவம் ஓடியது! ஓடிக்கொண்டே இருந்தது அதைப் பின்தொடர்ந்து ஒரு பெண்ணுருவம் ஓடியது. அந்த இரண்டு உருவங்களும் எங்கே ஓடுகின்றன? எதை நோக்கி ஓடுகின்றன? யாமறியோம் ஆனால் அவர்களின் ஓட்டத்தின் காரணம் தெரியும். அவர்களின் காதையும் தெரியும்.

அன்றொரு நாள்... இப்படித்தான் மக்களிடையே மௌனம் நிலவீற்று. ஆனால் இடையே இடி முழக்கமென ஒரு குரல் கேட்டுக்கொண்டே இருந்தது. குரலும் ஓய்ந்தது. கைதட்டல் ஒலியும் வானை முட்டியது. கூட்டமும் கலைந்தது காளை பேசி முடித்தான். அவன் கல்லூரியில் பயிலும் மாணவன் இளங்கோ என்பது அக்காளையின் பெயர். அவனைக் கண்டு காதலுற்றாள் காரிகை நல்லாள் ஒருத்தி குந்தவை எனும் பெயரினள். அவர்களின் காதல் வளர்ந்தது. அவர்களிடையே பணம் திரையிட்டுத் தடுக்கவில்லை. உயர்வு, தாழ்வு, ஊடாடவில்லை. ஆனால்!.....

இளங்கோவின் குடும்பம் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உயர்வெய்திய குடும்பம் குந்தவையின் குடும்பமோ இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் தாழ்ந்து விட்ட குடும்பம். என்னே இந்த உலகப்போர்களின் திருவிளையாடல்!

இளங்கோ தன் அண்ணனாகிய கனகசபையின் பாதுகாப்பிலே வளர்ந்தான்; பயின்றான் கனகசபை பணமே குறிக்கோள் எனக்கொண்டு வாழ்ந்தவன் இளங்கோ அறிவைத் தேடி அலைபவன். இருவருக்கும் இடையே எவ்வளவு பெரிய இடைவெளி! இவர்களுக்கிடையே மங்கையற்கரசி நின்றாள். அவள்தான் கனகசபையின் மனைவி. அவளுக்குச் சிறிய தாயார்தான் சுற்றம் எல்லாம் சிறிய தாயாருடைய பெண்கள் இருவர் அவர்கள்தான் குந்தவையும், அங்கயற்கண்ணியும் இளங்கோவுக்கும் குந்தவைக்கும் இடையே ஏற்பட்ட காதலை மங்கையற்கரசி அறியாதவள் அல்ல. கணவனிடமும் சொல்லி வைத்தாள். அவர்கள் காதல் மலரும் நேரம்....

இளங்கோவின் தந்தை குமுறினார் தாய்கூடாது என மறுத்தாள். "அத்தாணி புரச்சீமான் மகள் ஆடலழகியை மணந்தால் அளவற்ற செல்வம் கிடைக்கும்", என்றார். இளங்கோவின் தந்தை இளங்கோவின் தாய் குந்தவையின் தாயின் மீதிருந்த சிறுவயதுச் சிறு சண்டையால் கூடாதென்றாள். இளங்கோ தணலிலிட்ட புழுவானான். அவன் முதல் வகுப்பில் தேறிய செய்தியை இரண்டு நாட்களுக்கு முன்தான் குந்தவையிடம் கூறினான். குந்தவை மகிழ்ச்சியால் மயங்கினாள். ஆனால் 'காதல் தோல்வி' என்ற செய்தி அவளைக் கலங்க வைத்தது.

இளங்கோ தன் அண்ணனிடம் மன்றாடினான். கனகசபை மறுத்தான் தனக்குத் தன் தகப்பன் சொத்து கொடுக்க மாட்டார் என்ற காரணத்தால் இளங்கோ துடித்தான். தற்கொலைக்குத் துணிந்தான். கோழை என்ற எண்ணம் அவன் முடிவை மாற்றியது. அன்றே எங்கோ புறப்பட்டான்.

காலம் கடந்தது, குந்தவையைச் சுந்தர் என்ற டைரக்டருக்கு மணமுடித்து வைத்தாள் அவள் தாய். குடும்பத்தின் நிலை கண்டு குந்தவையும் ஒப்பினாள். சின்னாளில் தாயும் இறந்தாள். தங்கையைத் தன் கணவன் ஒப்புதல் பெற்றுப் படிக்க வைத்தாள்.

அன்று மறைந்த இளங்கோ ஒரு தெருவில் புலம்பிக்கொண்டிருந்தான். முற்றிலும் தெளிவற்ற நிலையிலல்ல. புலம்பிக் கொண்டிருந்த இளங்கோவின் நிலை கண்ட டைரக்டர் சுந்தர் இளங்கோவை வற்புறுத்திக் காரில் ஏற்றினார். பல வகையிலும் அவனைத் திருத்திப் புது மனிதனாக்கினார். நடிகனாக்கினார், கதையும், வசனமும் அவனே எழுதினான்

அவனே நடித்தான். டைரக்டருக்குப் புகழ்மாலை வந்து குவிந்தது: அன்று வரை மிகச் சாதாரணமாகக் கருதப்பட்டு வந்த டைரக்டர் திடீரெனப் புகழெய்தினார். செய் நன்றி மறக்காத டைரக்டர் இளங்கோவை விருந்துக்·கழைத்தார். அழைப்பை ஏற்ற இளங்கோ டைரக்டரின் வீடு சென்றான். அங்கே அவன் கண்டகாட்சி! நாலாண்டுகளுக்கு முன்னால் பார்த்த அதே உருவம். ஆனால் அழகு தவழவில்லை அதற்குப் பதில் துயர் குடி கொண்டிருந்தது. அவள் அன்றிருந்த கயல்விழியாளல்ல. கடமை என்ற உணர்வால் உலவிக்கொண்டிருந்த நடைப் பிணமவள். மயங்கி வீழ்ந்தாள் மங்கை நல்லாள். அவள் எழுந்திருக்கவே இல்லை! இவ்வுலகை விட்டே போய்விட்டாள். டைரக்டர் டாக்டரிடம் காரணம் கேட்டார். அவரால் 'அதிர்ச்சியால் கருச் சிதைவு, என்று மட்டுமே கூறமுடிந்தது டைரக்டர் துடித்தார். இளங்கோவெறிபிடித்தவன் போல் ஓடினான். "இரண்டுள்ளம் ஒன்றுபட்டபின் நின்று தடைபுரிந்தால் நீ நிச்சயம் தோல்வி கொள்வாய்", என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. இளங்கோ ஓடினான். அவனைத் தொடர்ந்து அங் கயற்கண்ணி ஓடினாள் தன் தமக்கையின் இடத்தை நிரப்பலாம் என்ற எண்ணத்தால், ஆனால் அது இயலுமா?... அதுவரை கேட்டுக் கொண்டிருந்த கார்களின் ஒலியும் நின்றது. இருவரின் ஓட்டத்தையும் போட்டி போட்டுக்கொண்டு கடலின் பேரிரைச்சல் கேட்டது. அமைதி அங்கே இல்லை. கடலின் பேரிரைச்சல் அந்த வட்டார முழுவதும் கேட்டுக்கொண்டே இருந்தது !......

இதுதான்..................?

by

S. கேசவராம் IV-B. A. IV-B.

அந்த வேதனையான செய்தி என் கண்களிலிருந்து கண்ணீரையெல்லாம் மடமடவென்று கொண்டு வந்தது. செல்வங் கொழிக்கும் அமெரிக்காவில் 'விவாக ரத்துக்கள்' பெருகிவிட்டன என்ற செய்திதான் அது. என் அருகில் இரகுநாதன் இருந்தான். அவன் கையிலிருந்த பெட்ரண்ட் ரஸ்ஸல் எழுதிய "திருமணமும் அதன் நீதிகளும்' என்ற நூலைப்பார்த்துப் பார்த்து என் உள்ளம் நைந்தது.

" அமைதியும் இன்பமும் நிறைந்த வாழ்க்கைக்கு அவர்களது கடல்போன்ற செல்வமும் அறிவும் பயன்படவில்லை! 'கணவனை விட்டுப் பிரிந்து போகிறேன், சனியன் தொலைந்தால் போதும், அவளை விட்டே ஒழிந்துவிடுகிறேன்' என்று வழக்கு மன்றத்தில் நிற்கும் கணவனும் மனைவியும் பெருகிவிட்டார்கள். இல்லற வாழ்க்கையின் அடிப்படை உண்மையை அவர்களால் அறிந்துகொள்ள இயலவில்லை. அந்தக் குறையைப் போக்கிக் கொள்ளவும் வழிகாணவில்லை. வழி இன்னது என்று அறியாமலும் விழிக்கிறார்கள். இதனால் சமூக வாழ்க்கையே நசியும் பிறகு நாடே, உலகமே நசியும்" என்று அவனிடம் உணர்ச்சிக்கொதிப்புடன் சொல்லி நிறுத்தினேன்.

" எந்தப் பிரச்சினையில் மீளமுடியாமல், அலங்கோலத் தோற்றத்துடன், வெறியுணர்ச்சியினால் உந்தப்பட்டு மேனாட்டுச் சமூகம் அலைந்து கொண்டிருக்கிறதோ, அதே பிரச்சினையில் தமிழன் தெரிந்தமனோ நிலையில் இருந்தான். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னால் இருந்தான்! காவிரிக்கரையில் நின்று இன்று உலகம் தவிக்கும் சூழ்நிலையை வென்று உலகிற்கே அறைகூவல் விடுத்தான். இல்லற வாழ்க்கையில் அவன் அனுபவித்த இன்பத்தைச் சொல்லில் பாட்டில், எண்ணற்ற கலைகளில் பிற்காலச் சந்ததிகள், ஏன், உலகமே துய்க்கட்டும் என்றுவடித்துக்கொடுத்தான். நமது முன்னோரின் பீடுசால் பெருமையை நினைக்குந்தோறும் என் சிந்தையெல்லாம்,தோள்களெல்லாம் பூரிக்கின்றதடா நண்பா!" என்று உணர்ச்சியோடு பேசினேன்.

"ஏது! அமெரிக்கா நாட்டில் பெருகிவரும் விவாகரத்துப் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக்கூடத் தமிழன் வழி சொல்லியிருக்கிறான் என்று சொல்லுவாய் போலிருக்கிறது. தமிழனுக்கு இதுவே ஒரு பைத்தியம். எல்லாம் எங்கள் இலக்கியத்தில் சொல்லியிருக்கிறது என்று சொல்லிக்கொள்வதிலே அவனுக்குத் தனியாத ஆவல். யாரோ ஓர் ஆசிரியர் எழுதிய புத்தகத்தை படித்திருக்கிறேன், இந்த உலகத்தில் தோன்றிய முதல் குரங்குகூடத்தமிழ்க்குரங்குஎன்று சொல்லிக்கொண்டால்தான் தமிழனுக்கு மனநிறைவு ஏற்படும் என்று. நல்ல ஆளப்பா நீ" என்றான், நண்பன்.

ஒரு பக்கம் என் கையில் பத்திரிகை. மற்றொரு பக்கம் நண்பன். யாருக்காக அழுவது என்று என் கண்களில் வந்து தங்கிய நீர் சிந்திப்பது போல் சிறிது நேரம் நின்றது. எனது புத்தக அறையின் ஒரு மூலையில் "குறுந்தொகை" என்னும் நன்னூல் பெருமூச்சு விட்டுப் பரிதாபப்பார்வையோடு என்னைப் பார்த்தது. நான் அந்த நூலைப் பிரித்தேன்.

அம்மூவனார் என்னும் அருந்தமிழ்ப்புலவர் அன்பாகியத்தேனில் தோய்த்துத் தந்த தீஞ்சுவைக் கனியை மனமுருகப் பாடினேன். பாடிப் பாடியாவது மனம் அமைதியுறாதா என்று ஏங்கினேன்.

" அது என்னப்பா, பாட்டா? பெரிய தலைவலிஎன்னஎழுதியிருக்கிறது" என்று கேட்டான்.

"இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னால் ஒரு தமிழன் இப்படிக் கூறியிருக்கிறான் என்பதை உலகம் நம்புமா! அவர்கள் கண்ட உலகம் பெரிய உலகம்! நம்முடைய உலகம் வேறு. வெறும் பணமும் பேராசையும் பிடித்தாட்டும் உலகம், வரண்டுபோன பாலை நிலமாய் நம் வாழ்க்கை இருக்கிறது. இந்தப் பாடலை படி எத்தனை தடவைகள் படித்தாலும் மனத்தில் சலிப்பே தட்டுவதில்லை. உயர்ந்த உணர்ச்சிக் களத்தில் நின்று உள்ளம் உருகுகின்றது" என்று கூறி அந்தப்பாட்டை எடுத்துக் காட்டினேன்,

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி வறுமை யாயினும்
நீயா கியர்நின் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே
(குறுந் 49)

"பாட்டா, அதுதான் தலைவலி என்றேனே! என்ன எழுதியிருக்கிறது? விஷயத்தைச் சொல்லப்பா" என்றான்.

அந்தோ! எதற்குப் பாட்டு, எந்நிலையிலும் பாட்டு, பாட்டே உயிர் உயிர் என்று வாழ்ந்த புகழ்மிக்க சமுதாயம் பாட்டா, தலைவலி என்று சொல்லிப் பெருமையுறுகிறதே என்ற எண்ணம் என்மனத்தைக் குடைந்தது.

"நண்பா! பூனையும் எலியும் போல் வாழ்க்கை நடத்தும் நம் காலத்து மனிதர்களைச்சற்று மறந்துவிடு. அவர்களின் கோணல் வாழ்வை நெஞ்சிலிருந்து ஒதுக்கிவிடு. இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கி உன் மனம் ஓடட்டும். சங்ககால உலகத்திற்கு என்னோடு சற்றுவா. அங்கே ஒரு தலைவி, தலைவனை நோக்கிக் கூறுவதைக்கேள்! அவள் தன் தலைவனை நோக்கிக் கூறுவதைத்தான் கவிஞன் இந்தப்பாட்டில் வடித்திருக்கிறான்" என்று கூறுகையில் நண்பன் குறுக்கிட்டு,

"என்ன சொல்லியிருக்கிறது? விரைவில் கூறேன்" என்றான்.

தன் தலைவனை நோக்கித் தலைவி கூறுகிறாள். "தலைவா! நான்என்றுமேஉன்னை பிரியேன். இந்தப் பிறப்பில் ஒரு கணமும் உம்மைப் பிரிந்து வாழேன். நீயும் அவ்வாறுதான் எண்ணுகிறாய். நம்முடைய உறவு ஆழமுடையது. வானினும் உயரமுடையது உலகினும் பரப்புமிக்கது! நம்முடைய உறவு உடம்பும் உயிரும் போன்றது, ஆயினும் ஒன்றிற்காக நான் அஞ்சுகிறேன். அஃதொன்றே என்னை மிகுதியாய் வருத்துகின்றது. இப்பிறப்பு முடிந்து விட்டால், மறுமை தோன்றிவிட்டால் நீங்கள் என்னைப் பிரிந்து விடுவீர்களா? நமது உறவே அற்றுப்போய் விடுமா? இதை எண்ணும் பொழுதுதான் என் உடலே நடுங்குகின்றது. அத்தகைய கொடிய துன்பம் மட்டும் நமக்கு நேரவேகூடாது. மறுமையிலும் நீங்களே-எனது உயிராகிய நீங்களே என் தலைவராக வருவீர்களாக! யான்-இந்தச் சிறியவள் உங்களுடைய உயர்ந்த இதயத்தில் தங்கும் பேறு கிடைப்பதாக அதையே நான் வேண்டுகிறேன். அப்பெரு வாழ்வையே அல்லும் பகலாய்க் கனவு காண்கின்றேன். அப்பெரு வாழ்வு எனக்குக்கிட்டும்! உறுதியாகக் கிட்டும் ஏனெனில் நம் அன்புமாசு மறுவற்றது."

"இதுதானப்பா அந்தப் பாட்டின் பொருள். வழக்கு மன்றத்தில் நிற்கும் சின்னதோர் கடுகுபோல் உள்ளங்கொண்ட இக்காலச் சமூகம் எங்கே! மறுபிறப்பிலும் என் தலைவராக நீங்களே வருதல் வேண்டும் என்று அவாவுகின்ற பெரியதோர் கடலன்ன, விரிந்த இதயங்கொண்ட பழந்தமிழன் குடும்பம் எங்கே! நண்பா! எண்ணிப்பார்" என்றேன்.

நண்பன் தலைகவிழ்ந்திருந்தது. அவன் விழியிலிருந்து நீர்த்துளிகள் உருண்டு தரையில் சிந்தின. அப்படியே என்னை அணைத்தவாறு, "நண்பா! என்னை மன்னித்துக்கொள். எனது வீரஞ்செறிந்த மூதாதையர்களின் உயர்ந்தஉள்ளங்களை உணராத கசடன் நான். தமிழில் என்ன இருக்கிறது என்று தருக்கித் திரிந்தேன். நல்லவேளையாய் என் கண்களைத் திறந்தாயப்பா" என்று மனம் உருக, நாத்தழுதழுக்கக் கூறினான். "வைதாரையும் வாழவைக்கும் தமிழல்லவா என் தமிழ்" என்று என் நெஞ்சம் விம்மிப்புடைத்தது.

நண்பன் சட்டென்று கேட்டான், "நண்பா! அவர்களில் மட்டும் இல்வாழ்க்கையில் இவ்வளவு பெரிய மகத்தான வெற்றி எப்படி காணமுடிந்தது? என்ன காரணம்? சொல், சொல் என்றான்.

★ ★ ★

நண்பா! 'கலித்தொகை' என்றோர் நூலுண்டு. கற்றோர் போற்றும் கலித்தொகை என்று உச்சி மீது வைத்துக் கொண்டாடுவார்கள். இந்நூலின் பாடல்களில் யாண்டும் சுவையே மலிந்து கிடக்கும்! கற்பார் இதயத்தை நெகிழவைக்கும் இன்றைய தமிழன் கற்றுத் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய எத்தனையோ செய்திகள் அதிலுண்டு. ஒன்றைச் சொல்கிறேன், கேள்."

"தலைவன் பொருள் தேடச்சென்றான். தலைவி தலைவன் பிரிவால் வாடினாள்! பிரிவினால் துரும்பாய் மெலிந்தாள்! கையில் அணிந்த தொடியும் நெகிழ்ந்து கழன்றது! அந்நிலையிலும் தலைவனை எண்ணி எண்ணிக் கலங்கிய வண்ணம் இருந்தாள். தலைவன் சென்ற இடம் கொடிய பாலை நிலம்! அழல் போல் கொதிக்கும் பாலையின் வழியே செல்லும் தலைவரின் கால்கள் எவ்வாறு நோகின்றனவோ! நாவரண்ட நேரத்தில் தண்ணீர் காணாத எவ்வாறு தவிக்கின்றாரோ! ஒதுங்கவும் நிழலின்றி எவ்வாறு துடிக்கின்றாரோ! என்றெல்லாம் எண்ணினாள். அவளால் என்ன செய்யமுடியும்? நீர் வடியுங் கண்களுடன் ஒரு கணம்மெலிந்த உடலைப் பார்த்தாள். வெறிச்செனத் தோன்றும் உலகத்தை நோக்கி விழித்துப்பார்த்தாள்! தலைவன் சென்றகொடிய பாலை நிலத்தின் வழியே அவள் நினைவுகள் சென்றன. துன்பத்தைப்பொறுக்க இயலாது "அந்தோ!" என்று கண்களை மூடினாள். பின் எதையோ நினைத்தவளாய் வானத்தை வெறிக்க வெறிக்க நோக்கினாள். வானத்திலே வெண் மேகங்கள் கூட்டங்கூட்டமாய் ஊர்ந்து கொண்டிருந்தன. அவைகளை நோக்கி, 'பஞ்சு போன்ற வெண்மையான மேகமே! என் தலைவர் கொடிய பாலைநிலத்தில் அனுபவிக்கும் கொடுமைகளை வார்த்தைகளால் வடிக்கவே முடியாது. நீ கூட்டத்தோடு ஆனந்தமாய்ச் செல்கின்றாய். 'நீர் நீர்' என்று அவர் நா அலைகின்றது. நீ உன் கூட்டங்களுடன் கைகோர்த்துகொண்டு திரிகின்றாயே! ஐயோ! அவர் படும் அல்லலைக் கொஞ்சம் நினைத்துப் பார். ஒருவர் துடிதுடிக்கக் கண்களால் பார்த்தும், காதால் கேட்டும், கவலையில்லாமல் திரியுங் கொடிய மனம் உனக்கு எப்படித்தான் அமைந்ததோ! என்ன வேலை செய்கின்றாய்! செல். இப்பொழுது எனக்காகச் செல். என் தலைவர் செல்லுமிடமெல்லாம் நீரைச் சொரிவாயாக! அவர் கால்பட்ட இடமெல்லாம் குளிர்ச்சியாய், எழில் பூத்த நிலையமாய் இருக்கும் வண்ணம் அமைப்பாயாக! எனக்காக-இந்த ஏழைக்காக உனது கருணையாகிய கொடையை அருள்வாயாக" என்று உள்ளம் உருக இறைஞ்சினாள்."

"சிறிதும் அசைவின்றி மேகம் ஒரு கணம் வானத்தில் அப்படியே நின்றது. "எனது இனிய வெண்முகிலே! ஏன் தயங்கித் தயங்கி நிற்கின்றாய்? ஏன்? ஏன்?" என்றாள். பிறகு சட்டென்று எதையோ உணர்ந்தவளாய், அறிவேன். ஏன் அசைவற்று நிற்கின்றாய் என்பதை உணர்வேன். நீயோ வெண்முகில், கடலிடை முகந்த பின்தான் கார்முகிலாய் உருவெடுப்பாய் எங்கே அகன்ற கடல் இருக்கிறது என்று உன் நெஞ்சு அலைகின்றது. ஆருயிர் முகிலே! அது குறித்துச் சற்றும் அஞ்சவேண்டாம். இதோ பார். உன் எதிரே எவ்வளவு பெரிய அகன்ற கடல்! தெரியவில்லையா? தலைவரை நினைந்து நினைந்து நான் வடிக்குங் கண்ணீர்க்கடல் உன்கண்களில் படவில்லையா? வா. வந்து இறங்கு! என் கண்ணீர்க் கடலில் உனக்குவேண்டிய அளவு நீர் முகந்து கொண்டு செல். நீ மட்டுமல்ல உனது அளப்பரிய கூட்டமே வரட்டும் எனது கண்ணீர்க் கடலில் நீருக்கு ஒன்றும் குறைவில்லை. நீங்கள் எத்தனைகாலம் முகந்து கொண்டு செல்லினும் என்றுமே அது வற்றாது. வா. வா. என்று தலைவி உணர்ச்சியோடு கூறினாள்.

இத்தகைய கருத்தமைந்த பாட்டு இதுதான்:-

தாழ்பு துறந்து தொடி நெகிழ்த்தான்
போகிய கானம்
இறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி
வறந்தன்ன செய்தியே வானஞ் சிறந்தன்ன
கண்ணீர்க் கடலால் கனை துளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து
(கலித்தொகை 149)

"நண்பா! இந்தப் பாடலைப் படிக்குந் தோறும்என் உள்ளத்தில் எங்கோ இனிக்கிறது. எவ்வளவு உயர்ந்த பாட்டு!"

"இன்றே எங்களைப் பிரித்துவிடுங்கள் என்று வழக்கு மன்றத்தில் துடிப்புடன் நிற்கும் குடும்பத்தினின்றும் வேறுபட்டு, மறுமையிலும் எங்களுக்கு அன்புப் பிணைந்த முழுவாழ்வே வேண்டும் என்று வேண்டுவது ஏன்? இதற்குக் காரணத்தை இந்தப் பாட்டு சொல்லாமற் சொல்லி உணர்த்துகின்றது. அன்பு..... அன்பு....குறைகளைத் தோன்றாதவாறு மூடி மறைத்து விட்டு பெருங்குணங்களில் ஆழ்த்தும் தூய இனிய நட்பு! அவர்கள் வாழ்க்கை வெறும் பொருளால் வாழ்க்கையை அலைக்கும் பிறவற்றால் பிணிப்புடைத்தன்று. தனக்குரிய முழு நலத்தையும் பிறருக்காகத் துறந்துவிட்டு அதில் அமைதியும் இன்பமும் காணும் அன்பாகிய கயிற்றால் பிணிப்புண்டது! உடலின்றி உயிர் இல்லை! உயிரின்றி உடலில்லை! இதுதான் காரணம் நண்பா! நீ கேட்ட கேள்விக்கு **இதுதான் காரணம்** நண்பா!" என்றேன்

"பாவையும் பெயரும்"

by

S. திருமலைசாமி IV B. A. IV B.

காட்சி 1

(கல்லூரி விடுதியில் பத்தாம் நெம்பர் அறை மணியும் சேகரும் இருக்கின்றனர்)

சேகர்:- டேய் மணி உன்னுடைய 'slack shirt'யைக் கொஞ்சம் கொடுடா! என்னிடம் ஒன்றும் இல்லைடா போட்டுக்கொள்ள.

மணி:- ஏண்டா எதுக்குடாப்பா ஏங்கிட்டேயே இருக்கிறது ஒண்ணே ஒண்ணு. மற்றதையெல்லாம் 'Dhoby' எடுத்துக்கிட்டுப் போனவன் கொண்டாரல்ல. ஒரு 'Fortnight' ஆகப் போகுது இன்னும் துணிவருவதற்குண்டான அறிகுறியே காணோம்! இதையும் கொடுத்திட்டு நான் என்ன பனியனையா போட்டுகிட்டு காலேஜுக்கு வர்றது.

சேகர்.- டேய்! மணி எப்படியாவது ஒண்ணு கொடடா; இப்ப நான் என்னடா செய்றது. ஹூம்....ம் சரி இன்னைக்குக் காலேஜுக்கு மட்டம் தான், போ!

மணி:- டேய்! சரிதாண்டா. நீ போட்டுக் கொண்டு வருகிற Socks இல்லாத பூட்ஸ்க்குப் பனியனே போதும்டா!

சேகர்:- டேய்! என்னடா சொன்னே பெரிய காலேஜ் Lecturers களும் professors களும்கூட 'Socks' இல்லாமல் வருகிறாங்க. நாமெல்லாம் என்ன்டா After all Nothing .... ஆமாம்....ஏண்டா மணி! உன்னுடைய 'Girl Friend' பிரேமாவைச் சந்திக்கப் போகணும்னு சொன்னயே? 'Slack Shirt' ஞாபகத்திலே அவளை மறந்திட்டியோ

